
விலை சதம் 20


# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 1999, மார்கழி 12 உ. வியாழன் (26-12-68) ஷவ்வால் 5 புத்தகம் 23 இதழ் 10




### படுதோல்வியடைந்த கூட்டாட்சி சார்பு வேலை நிறுத்தக்காரர்களின் ஆத்திரம் திசை திரும்புகிறது!

# தமிழ் ஊழியருக்கெதிராக துவேஷக் கூச்சல் கிளம்பும்!



"நன்றி கெட்ட தனம்"

அரசாங்கத்தை வீழ்த்திவிடும் சதிநோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுக்கட்சிகள் சார்பான தொழிற் சங்கங்களின் வேலை நிறுத்தம் பிசுபிசுத்து விட்டதைத் தொடர்ந்து பிச்சைவேண்டாம் நாயைப்பிடி என்ற நிலையில் சம்பள உயர்வுக் கோரிக்கையை ஆழக்குழி தோண்டிப் புதைத்து விட்டு வேலைக்கு திரும்பியுள்ள கூட்டுக்கட்சி சார்பு தொழிற்சங்க ஊழியர்கள், வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ள மறுத்த தமிழ் ஊழியர்களுக்கெதிராக துவேஷப்பிரசாரத்திலிறங்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு அரசாங்க திணைக்களங்களிலும், தமிழ் ஊழியர்களுக்கு ஆத்திரத்தையும், அருவருப்பையும் ஏற்படுத்தக் கூடிய இனத்துவேஷப் பிரசாரத்தில் இவர்கள் இறங்கக் கூடுமென தெரிகிறது.

பெரும்பாலான தமிழ் அரசாங்க ஊழியர்கள் கூட்டாட்சிவாதத் தொழிற் சங்கங்களினால் அரசியல் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு தோல்வியில் முடிந்த இவ் வேலை நிறுத்தத்தில் பங்குபற்ற மறுத்தது தெரிந்ததே.

வேலை நிறுத்தம் நடைபெற்ற நாட்களில் அரசாங்க நிர்வாகத்தை இயக்கியவர்கள் தமிழ் ஊழியர்களே என்ற உண்மை கூட்டாட்சி சார்புத் தொழிற் சங்க வாதிகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளதாம். தமிழ் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் பங்குபற்ருததே, வேலை நிறுத்தம் படுதோல்வி யடைந்ததற்கு ஒரு காரணம் என்று கூட்டாட்சிவாத தொழிற் சங்கங்கள் கருதிவருகின்றனவாம்.

(9-ம் பக்கம் பார்க்க)

## சுதந்திரன் வண்ண நாள் காட்டி

அடுத்தவார சுதந்திரன் இதழுடன் வழங்கப்படும்!

பிரதிகளுக்கு பதிவு செய்து கொள்ளுங்கள்.

## தமிழ் காங்கிரஸ் கூட்டத்தில் காடைத்தனம்!
## கேள்வி கேட்டவர் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் கூட்டமொன்றில் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் எம். பி. யிடம் கேள்வி கேட்ட ஒருவர் சிலரால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்ட சம்பவமொன்று சென்ற வாரம் நடைபெற்றிருக்கிறது.

யாழ். மாநகர சபைத் தேர்தலில் 12-ம் வட்டாரத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட திரு. ஆ. நடராசாவைப் பாராட்டுமுகமாக இம்மாதம் 19-ம் திகதி நல்லூர் முத்திரைச்சந்தை மைதானத்தில் ஓர் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்துடன், உடுப்பிட்டி எம். பி.யும் கலந்து கொண்டார். திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் உள்ளூராட்சிமன்றங்களில் இலஞ்ச ஊழல் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது கூட்டத்திலிருந்த இளைஞர் ஒருவர் எழுந்து திரு. பொன்னம்பலத்தை நோக்கிச் சில கேள்விகள் கேட்டாராம்.

இவ்விளைஞரின் கேள்விக்குத் திரு. பொன்னம்பலம் பதில் கூருது மேலே பேசிக் கொண்டுசெல்லவே, கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லும்படி கேள்விகேட்ட இளைஞர் வற்புறுத்தினரென்றும், அப்போது கூட்டத்தில் வைத்துக் காடையர் சிலரால் அவ்விளைஞர் நையப்புடைக்கப்பட்டாரென்றும் அறியப்படுகிறது. உடனே கூடியிருந்த மக்கள் கூட்டம் கொந்தளித்தெழுந்ததாம்.

இக்களபுளாவுடன் கூட்டம் இடையில் நிறுத்தப்பட்டதென்றும் அறியப்படுகிறது.

## சாவகச்சேரித் தொகுதியில் சிங்களவரை குடியேற்றுவது ஏன்?-சு. கட்சி எம். பி. கேள்வி!

சாவகச்சேரி புகையிரத நிலையத்திற்கும் பஸ் வழிக்கும் ஐந்து மைல்களுக்கப்பாலுள்ள கெற்றிப்பாலி என்னும் கிராமத்தில் உள்ள 10 ஏக்கர் வரண்ட காணியில் ஓர் துண்டுக் காணியாவது சிங்களவருக்கு ஒதுக்கப்படுமா? இல்லையெனில் ஏன்?

—மேற்கண்டவாறு 1969 சனவரி 21-ம் திகதி காணி நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்கவிருக்கிருர் சுதந்திரக்

(9-ம் பக்கம் பார்க்க)

## சுதந்திரன் வாசகர்களுக்கோர் பொங்கல் பெரு விருந்து!

அத்தியாயத்துக்கு அத்தியாயம் விறுவிறுப்பான சம்பவங்கள் நிறைந்து படிப்பவர்களைப் பாத்திரங்களுடன் ஒன்றச் செய்யும்

## அரிய தொடர் நவீனம்!

ஈழத்தின் பிரபல நாவல் ஆசிரியர் எழுதுகிருர்!

எழுதுவது யார் என்பதையறிய அடுத்த வாரம்வரை பொறுத்திருங்கள்!

மறவாதீர்கள்!

தொடர் நவீனம் ஆரம்பமாகும் திகதி

# 10-1-1969

உங்கள் பிரதிக்கு முந்திக் கொள்ளுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சிறுகதை

# அவன் ஏன் அழுதான்

பா. பாலேஸ்வரி

அன்று மாதத்தின் கடைசி நாள். விமலன் வேலை பார்க்கும் கந்தோரில் அன்று தான் சம்பளம் கொடுக்கப்படும். அதனால் விமலன் அன்று சிறிது விரைவாகவே காரியங்களைச் செய்து முடித்துவிட்டுத் தன் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு தெருவில் இறங்கி நடந்தான். அப்போது அன்றுகாலை அவன் குழந்தை மாதவி அவனிடங் கேட்ட பொருள் நினைவுக்கு வரவே அவன் கால்கள் அவனைக் கடைப்பக்கம் இழுத்துச் சென்றன: அங்கே பாதையோரத்தில் அழகாகப் பரப்பி வைத்திருக்கும் பொருட்கள் அவன் கவனத்தை ஈர்க்கின்றன. 'அப்பா, எனக்கு நல்ல முடி வைத்த கண்மூடி பொம்மை ஒன்று வாங்கி வாங்கோ...' என்று குழந்தை கூறியது நினைவிற் தட்டியதும் அவன் விற்பனைக்காக வைத்திருந்த பொம்மைகளிற் சிலவற்றை எடுத்துப் பரிசீலனை செய்து பார்க்கிறான். அவனது ஆசையைப் புரிந்துகொண்ட கடைக்காரன் பொம்மையின் விலையை இரட்டித்துக் கூறுகிறான். விமலன் அதைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. தன் அன்புக் குழந்தையின் அபிலாட்சையை நிறைவேற்றுவதே அவன் குறிக்கோளாக இருக்கிறது. கடைசியாக உள்ளதுக்குள் நல்லதோர் பொம்மையாகப் பொறுக்கி எடுக்கும்போது அதை ஒட்டினாற் போல சாத்தி வைக்கப்பட்டிருந்த விளையாட்டுத் துப்பாக்கி தவறிக் கீழே விழுகிறது.

கூடவே அவன் சிந்தனையும் அந்தத் துப்பாக்கியைப் பின்பற்றிச் செல்கிறது. அவன் குனிந்து அதை எடுத்துக்கடைக்காரனிடம் அதன் விலையைக் கேட்கிறான். பத்து ரூபா ஐம்பது சதம் என்கிறான் கடைக்காரன். இரண்டு பொருட்களும் வாங்குவதாக இருந்தால் அவன் சம்பளத்தில் இருபத்தைந்து ரூபா போய்விடும்.

பொருளாதாரம் மட்டும் இடங் கொடுத்திருந்தால் அவன் இப்படி ஒரு சிந்தனைக்கு இடமளித்திருக்கவே மாட்டான். அவன் மனம் கணக்குப் போடுகிறது. "மாமா, எங்கப்பா வரும் போது எனக்கு ஒரு நல்ல துப்பாக்கி வாங்கி வரும், துப்பாக்கி ஒண்டு இருந்தா எனக்கு சாப்பாடே தேவை இருக்காது... மாதவிக்கு நீங்கள் வாங்கிக் கொடுப்பதுபோல் எங்கப்பாவும் எனக்கு வாங்கித்தரும் இல்லையா மாமா" பக்கத்து வீட்டுச் சிறுவன் பாலனின் பிஞ்சு மனத்தின் ஆசைகள் அவனைப் பாடாய்ப் படுத்துகின்றன. அதற்கு மேலும் சிந்திக்க இடமில்லாதவனாய் அவன் தன்சம்பளத்தில் இருபத்தைந்து ரூபாயை எண்ணிக் கொடுத்துவிட்டுக் கடைக்காரன் கொடுத்த இரண்டு பொருட்களையும் பெற்றுக் கொண்டு செல்கிறான். தன் சம்பளத்தில் ஒருதொகை குறைந்துவிட்டதே என்ற கவலையைவிட ஒரு குழந்தையின் ஆசையை நிறைவேற்றுகிறோம் என்ற நிம்மதி அவனை ஆசுவாசப் படுத்தியது.

அவன் தன் வீட்டை அடைந்தபோது சாடையாக இருட்டி விட்டிருந்தது, கொழும்புப் பட்டணத்தில் வசிக்கும் அறையாக மாற்றப்பட்டிருந்த ஒரு மாடி வீட்டின் மோட்டார் கரேஜ் தான் அவன் வீடு. அப்படி ஒரு இல்லிடம் தான் அவன் சம்பளத்தில் அந்தச் சூழலில் அவன் அமைத்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

அந்த மோட்டார் கரேஜுக்கு நவீனவசதிகள் செய்யப்பட்டுப் பக்கத்தில் ஒரு சிறிய சமையலறையும் இணைக்கப்பட்டிருந்ததால் அவனது சிறியகுடும்பத்துக்கு அது கிடைத்ததே பெரிய அதிர்ஷ்டம் எனக் கருதினான்: மாதா மாதம் எழுபத்தைந்து ரூபாவை அவன் அந்த வீட்டுக்கு ஒதுக்கி விட்டுத்தான் மற்றச் செலவுகளைக் கணக்குப் பார்ப்பான் அந்த சிறிய வீட்டு வாயிலில் நாற்காலியொன்றைப் போட்டுக் கொண்டு தனது தந்தையின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த மாதவி அவனைக் கண்டதும் எழுந்து துள்ளிக் கொண்டே ஓடிப்போய் அவனைக் கட்டிக் கொண்டாள்.

அவளை அப்படியே அணைத்துக் கொண்ட விமலன் தன் கையில் இருந்த பொம்மைப் பொட்டலத்தை அவளிடம் கொடுத்து அவளையும் அழைத்துக் கொண்டே வீட்டுக்குள் சென்றான். தந்தையும் மகளும் வீட்டுக்குட் செல்லும்போது எங்கோ இருந்து ஓடிவந்த பாலனும் அவர்கள் பின்னாற்சென்று பொம்மைப் பெட்டியையும் மாதவியையும் மாறி மாறிப் பார்த்தான். அவன் பார்வையில் ஏக்கம் நிறைந்திருந்தது. "என்ன மாதுக்குட்டி பொம்மையா? எனக்குங் கொஞ்சம் காட்டன் பார்க்கலாம்...ம் காட்டேன்...ப்... பூ... காட்டமாட்டாயா?... உன்னுடன் நான் கோபம்.

மாதவி பிகு பண்ணும் போது பாலனின் பார்வை விமலனின் பக்கந் திரும்புகிறது. "மாமா பொம்மையை எனக்கும் கொஞ்சம் காட்டச் சொல்லுங்களன்: நான் தொடமாட்டன் மாமா..."

பாலனின் கெஞ்சல் மொழிகள் விமலனின் மனதை ஏதோ செய்கின்றன. அந்தக் குழந்தையின் இருவிழிச் சுடர்களும் அவனுக்குஏசோ பழைய சம்பவத்தை நினைவூட்டுவது போலிருந்தது. அந்தக் கண்களை அவனால் புரிந்து கொள்ளவே முடிவதில்லை. ஆயினும் அவற்றில் அவனுக்கு ஒரு கவர்ச்சி. ஒரு ஆசை.

ஆமாம்! அவன் அந்த மோட்டார் கரேஜ் வீட்டுக்கு வந்தே ஆறு மாதங்கள் தான் ஆகின்றன. அந்த வீட்டுக்காக இல்லாவிட்டாலும் அந்த வீடு அமைந்திருந்த சூழலுக்காகத்தான் அவன் அவ்வளவு பெரிய தொகையைக் கொடுத்து அந்தச் சிறிய வீட்டை அமைத்திருந்தான்: அவன் வீட்டைச் சுற்றியிருந்தவர்கள் எல்லோரும் பெரிய பங்களா வாசிகள்: ஏழ்மையாக இருந்தாலும் கௌரவமாக நாலு நல்லவர்கள் மத்தியில் வாழலாம் என்றுதான் அவன் தன் நண்பன் ஏற்பாடு செய்து கொடுத்திருந்த அந்த வீட்டை ஏற்றுக் கொண்டான்:

அந்த கரேஜ் அமைந்திருந்த இடம் ஒரு பெரிய பங்களா? அதில் பெரிய முதலாளி ஒருவர் குடும்பத்துடன் இருந்தார். அவர் அடிக்கடி வியாபார நிமித்தமாக வெளியே செல்கிறபடியால் வீட்டில் உள்ள பெண்களுக்குத் துணையாக ஒரு நல்ல குடும்பம் இருக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் அவர் அந்த கரேஜையே வாடகைக்கு விட்டிருந்ததாக விமலன் அறிந்திருந்தான். அது பெரிய தோட்டமாக இருந்ததால் வேறு ஒரு புறமாக தகரத்தில் ஒரு கரேஜ் அமைத்து அதில் தங்கள் மோட்டாரை விட்டிருந்தார்கள் அந்த வீட்டார்.

அந்தத் தோட்டத்தின் எல்லைப்புறச் சுவருடன் சேர்ந்தாற்போல் இருந்தது ஒரு பெரிய வீடு. அதில்ஒரு அறையில் சில தினங்கள் தன் தாயுடன் வந்து தங்கிவிட்டுப் போபவன் தான்பாலன்.

விமலன் அந்த வீட்டுக்குக் குடிவந்த போயா தினத்தன்றே பாலன் அவனுக்கு அறிமுகமானவனாய் விட்டான். வீட்டுச் சாமான்களை இறக்கும்போது "நானும் உதவி செய்யட்டுமா மாமா..." என்று வலிந்து வந்து உதவிய பாலனின் அந்தப் பேசும் கண்கள் அவனை அப்படியே வசீகரித்து விட்டன. பாலன் ஒரு நல்ல பண்புள்ள சிறுவன் என்று மட்டும் அறிந்திருந்த

விமலனுக்கு அடுத்த வீட்டுக்காரர் அவனுடைய சோக வரலாற்றைக் கூறியபோது அந்தச் சிறுவன் மேல் ஒரு அநுதாபமே ஏற்பட்டது. ஒரு நாள் பாலன் குழந்தை மாதவியைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போயிருந்தான். அதைப் பார்த்துக் கொண்டிருந்த அடுத்த வீட்டுக்காரர் ஓடோடி வந்து சொன்ன செய்தி விமலனைத் திடுக்கிட வைத்தது. அன்றுதான் பாலனுடைய குடும்ப வரலாறும் அவனுக்குத் தெரிய வந்தது.

பாலனுடைய தாயாருக்கு அவன் பிறந்த சிலநாட்களில் சித்தங்கலங்கிவிட்டதாகவும் அதனால் அவர்களைத் தவிக்கவிட்டு அவனுடைய தகப்பனார்—ஒரு டாக்டர்—மறுமணஞ் செய்துகொண்டு விட்டாராம். அதன்பின்பு அந்தப் பெண்ணின் நிலை மோசமாகி விட்டதென்றும் அவளுடைய பெற்றோர் ஒருவர் பின் ஒருவராக இறக்க சித்தப்பா முறையானவர் கோர்ட்டில் வழக்குத் தாக்கல் செய்து கோர்ட்டார் உத்தரவுப்படி மாதா மாதம் பாலனின் படிப்புக்காக ஒரு தொகையும் மனைவிக்காக ஒரு தொகையும் அந்த டாக்டர் கொடுத்து வருகிறாராம். அந்த வீட்டுக்காரர் தான் அவள் சித்தப்பா முறையானவர் என்றும் பாலன் பாடசாலை விடுதியில் இருந்து போயா தினங்களிலும் விடுதலை நாட்களிலும் தாயுடன் வந்து தங்கிக் கொள்வதாகவும் அறிந்தான்.

ஆயினும் அந்தப்பெண்ணை அவன் இதுவரை கண்டதில்லை. அவளை ஒருமுறையாவது பார்த்துவிட வேண்டும் என அவன் எடுத்த முயற்சிகள் எல்லாம் வீணாயின: அவள் பகல் முழுதும் அறைக்குள்ளேயே பூட்டிக் கொண்டிருப்பதாகவும் இரவில் தான் வெளியிற் சென்று குளிப்பதாயும் அறிந்தான். இடையிடையே தன்னை மறந்து அந்தப் பெண் பேசும் வசனங்களையும் பாடல்களையும் அவன் கேட்டிருக்கிறான்: ஆனால் அப்போது கூடக் கதவு அடைத்துத் தான் இருக்கும். பாலனிடம் அவன் தாயைப் பற்றி ஏதாவது கேட்டால் "எங்கம்மா பாவம் பைத்தியம். என் மேல் எங்கம்மாவுக்குரொம்பப் பிரியம். என்னை ஒன்றும் செய்யாது" என்றுகபடமின்றிக் கூறுவான்.

அவன் மனைவி சிவகாமி மட்டும் இருந்து விட்டு எப்போதாவது அடுத்த வீட்டுக்குப் போய் வருவாள்: ஆனால் அவள்கூட பாலனின் தாயை ஒரு நாட் கூடக் கண்டதில்லை என்று தான் கூறியிருக்கிறாள். அந்தப் பெண்ணைப் பார்க்க யாரும் எத்தனிப்பதுமில்லையாம்.

அவள் தற்செயலாக யாரையாவது காண நேர்ந்தால் அகப்பட்ட பொருட்களால் எறிந்து அவர்களைக் காயப்படுத்தி விடுவதாகவும் அறிந்தான். ஆனால் பாலன்மட்டும் அந்த அறைக்குள் நினைத்தபடி போய் வர அந்தப்பெண் அனுமதியளித்திருந்தாளாம். இதுதான் பாலனைப்பற்றி அவன் அறிந்த வரலாறு. அதன்பின்பு அவன் தன் மகளை மறந்து கூட அங்குபோக அனுமதிப்பதில்லை. அந்தப் பெண் மேல் அப்படியொரு பயம் அவனுக்கு. இருந்தும் அந்தக் குடும்பத்தைப் பற்றி அவன் கேள்விப்பட்டதை நினைத்துப் பார்க்கும்போது அவனையறியாமலே அவன் மனதில் ஒரு சந்தேகம் எழும். பிறர் நினைப்பது போல் அவளுக்கு உண்மையில் பைத்தியந்தானா......? இதைப்பற்றி ஆராய அவன் இன்றுவரை முயன்றுகொண்டுதான் இருக்கிறான். ஆனால் வெற்றிமட்டும் இன்னும் கிட்டிய பாடாக இல்லை.

"மாது உன் பொம்மையைக்கொஞ்சம் அண்ணாவுக்குக் கொடம்மா......அவன் பார்த்துப் போட்டுத் தருவான். இம்......... என் கண்ணல்ல!"

"ஊஹூம் மாட்டன்" மாதவி அடியோடு மறுக்கிறாள். "மாதுக்காப் பிள்ளை நாங்கள் பாலனுக்கு ஒரு நல்ல பொம்மை வாங்கிக் கொடுப்பம். இனி மாதுக்கு எதுவுமே வாங்கிக் கொடுப்பதில்லை." அங்கு நின்ற சிவகாமி பாலனுக்காகப் பரிந்து பேசினாள்.

"எனக்குப் பொம்மை வேண்டாம் மாமி. துப்பாக்கி தான் வேணும்" பாலன் சிவகாமியிடம் உரிமையுடன் கேட்கிறான்.

அந்நேரம் பார்த்து விமலன் தான் வாங்கிவந்த மற்றப் பொட்டலத்தை எடுத்து பாலனிடம் நீட்டுகிறான்.

"இன்றைய சம்பளப் பணத்தில் மாதவிக்கு ஒரு பொம்மையும் பாலனுக்கு ஒரு துப்பாக்கியும் வாங்கி வந்தன் சிவகாமி" தன்னைக் கேள்விக் குறியுடன் பார்க்கும் மனைவிக்கு விளக்கம் கொடுக்கிறான் அவன்.

"எனக்கா மாமா......நிஜமாவா...?" சந்தேகத்துடனும் ஆச்சரியத்துடனும் கேட்கும் குழந்தையிடம் பொட்டலத்தைப் பிரித்துக் கொடுக்கிறான் விமலன்.

அந்தத் துப்பாக்கியைத் தன் கையில் பிடித்துத் திருப்பித் திருப்பிப் பார்க்கிறான் பாலன். அவன் கண்களில் ஒரு நிறைவு. முகத்தில் ஒரு மகிழ்ச்சி. மாமா அம்மாவிடம் கொண்டு போய் காட்டட்டுமா? குழந்தையின் ஆவலைத் தெரிந்து கொண்டு அவனுக்கு விடை கொடுத்து அனுப்புகிறான் விமலன்.

துப்பாக்கியுடன் துள்ளிக் குதித்தோடும் குழந்தையைப் பார்த்துக் கொண்டிருந்த விமலனும் சிவகாமியும் நிம்மதியோடு பெருமூச்சு விடுகின்றனர். இரண்டு நாட்களாகக் குழந்தை பாலன் அந்தம் பக்கமே வரவில்லை. மூன்றும்நாட் காலை அவன் அந்தத் துப்பாக்கியுடன் வருகிறான். இரண்டு நாட்களாக உன்னைக் காணவில்லையே பாலா...? இப்போதுவிடுதலை தானே...?எங்காவது போயிருந்தாயா...? என்று விமலன் கேட்ட கேள்விக்குத் தனக்கு உடல் நிலை சரியில்லை என்று பதில் அளித்து விட்டுத் தொடர்ந்து "அம்மாவுக்குத் துப்பாக்கி ரொம்பப் பிடித்துப் போய் விட்டது மாமா. உனக்கு யார் இந்தத் துப்பாக்கி வாங்கிக்கொடுத்தது பாலா என்று கேட்டா. பக்கத்து வீட்டு மாமா என்றேன். உடனே அம்மா என்ன சொல்லிச்சு தெரியுமா மாமா...அந்த மாமாவைப் பார்க்க எனக்கு ரொம்ப ஆசையாயிருக்கு பாலன். இன்று இரவுக்கு எல்லாரும் படுத்தப்புறம் வரச் சொல்றியா...? கண்டிப்பா நான் அவரைப் பார்க்கணும் என்று சொல்லிச்சு மாமா. அதனால் இன்று இரவு கண்டிப்பா நீங்க வரணும்.ஏன்மாமா...? என்று அவன் தொடர்ந்து விமலனுக்கு மட்டுங் கேட்கும் படியாகக் காதுக்குள் கிசுகிசுத்தபோது விமலன் திடுக்கிட்டான். ஆயினும் சரியென்பதற்கு அடையாளமாகத் தலையை மட்டும் அசைத்துக் கொண்டான்.

பல நாட்களாகவே அந்தப் பெண்ணைப் பார்க்க வேண்டும் என்று தன் மனதில் பதுங்கியிருந்த ஆசை நிறைவேற ஒரு சந்தர்ப்பம் வாய்த்துவிட்டது என்ற சந்தோஷம் இருந்தாலும் அவன் மனதில் கூடவே ஒரு பயமும் குடிகொண்டிருந்தது.

கணவனைப் பிரிந்துவாழும் ஒரு பெண். அதிலும் சித்தசுவாதீனமற்ற பெண். அவளைத் தனிமையிற் சென்று தான் பார்ப்பதை நாலு பேர் பார்த்தால் ஏதாவது தேவையற்ற வதந்தியைக் கிளப்பிவிடுவார்கள் என்றும்பயந்தான்.அந்தப்பெண் தனக்கு ஏதாவது செய்துவிட்டால் என்ன செய்வது என்ற அச்சமும் அவனை வாட்டியது. ஆயினும் அவளைப் பார்த்துவிட வேண்டும் என்ற துடிப்பு அவனுக்கு ஒரு துணிவைக் கொடுத்தது.

பாலன் கூறிய செய்தியொன்றையும் அவன் தன் மனைவியிடம் கூறவில்லை. அவளுக்குத் தெரியவந்தால் தனக்கு பாலன் வீட்டுக்குச் செல்ல அனுமதி கிடைக்காது என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். அதனால் எப்போது இரவு வரும் என அவன் காத்திருந்தான்.

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நடனமாடி'
மடுல்சிமை.

கே: நவம்பர் 28ம் திகதி ஆரம்பமான வேலைநிறுத்தம் பற்றி என்ன நினைக்கிறீர்?

ப: இனி அடுத்த சில ஆண்டுகளுக்கு வேலைநிறுத்தம் பற்றி சிந்திக்க முடியாத அளவுக்கு தொழிற்சங்கங்களுக்கு பலத்த அடியாகி விட்டது!




கே: 1970ம் ஆண்டில் நடைபெறப் போகும் பொதுத் தேர்தலின்பின் எந்தக்கட்சி ஆட்சிக்குவரும்?

ப: அதை அப்போதிருக்கும் நிலையை ஆராய்ந்து தமிழரசுக் கட்சி தீர்மானிக்கும்!

ஆர். கண்ணன்
நீர்கொழும்பு.

கே: கடவுள் மனிதனுகப் பிறந்தால் முதலில் என்ன தொழில் செய்வார்?

ப: கர்ப்பத்தடை மருந்து விற்பார். ஏனெனில் சனப்பெருக்கம் அதிகரிப்பதால் அதிக தொல்லையடைவது கடவுள்தானே!

கே: கியூவரிசையை முதன் முதல் கண்டுபிடித்தது யார்?

ப: சிற்றெறும்புகள்!

ரி. ஆர். சிங்கம்
தொண்டைமனுறு.

கே: மக்கள் திலகம் எம். ஜி. ஆர். ஒரு சட்டசபை உறுப்பினரா? எந்தத்தொகுதியில்? எவ்வளவு வாக்குகளால் வெற்றிபெற்றார்?

ப: ஆம், பரங்கிமலைத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர். 10,000 அதிகமான மெஜாரிட்டியுடன் சென்ற தேர்தலில் இத்தொகுதியில் வெற்றி பெற்றார்.

ஆ. இராசலிங்கம்
சதர்லென்ட் எல்ல.

கே: தமிழ் சமுதாயத்தின் இன்றைய நிலை என்ன?

ப; ஆபாசப்பத்திரிகைகளையும், ஆபாசசினிமாப் படங்களையும் படிப்பதில் ஆர்வம் அதிகரித்துள்ள நிலைதான்!

வாலிபர்கள்,
வடலியடைப்பு.

கே: த. அ. கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், கிளிநொச்சி பா. உ. மாதிரி, மக்களின் விடயங்களில் அக்கறை காட்டி, பொது நோக்குடன் சேவை செய்ய முன் வந்தால் என்ன?

ப: சேவை செய்துகொண்டுதானே வருகிறார்கள்!

கே: அடுத்தபாராளுமன்ற தேர்தலில் வட்டுக்கோட்டை தொகுதியில் த. அ. கட்சி வீழ்ச்சியடையும் என்றுசிலவாலிபர்கள்சொல்லுகிறார்கள், நான் கூடுதலான வாக்குசீட்டு குறையும் என்று நினைக்கிறேன். உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: இரு கருத்துமே தவறு. சென்ற தடவையை விட அமிர்தலிங்கத்தாருக்கு பெரும் பான்மை அதிகரிக்கும்என்று நான்கூறுகிறேன்!

சி. ஸ்ரீஸ்கந்தராசா
அக்கரைப்பற்று.

கே: இலங்கைப்பெண்களுக்கும் தாய் நாட்டு பெண்களுக்கும் உள்ளவித்தியாசம்?

ப: திருமதி சிறிமாவுக்கும் இந்திராவுக்கும் உள்ள வித்தியாசம்தான்!

பொ. யோகராசா
திரியாய்-திருமலை.

கே: யாழ். மாநகரசபையின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

ப: துலக்கமாக இருக்கும் என்று [illegible] முடியாது!

கே: ஊர்காவற்றுறை எம். பியை மீண்டும் கட்சியில் சேர்ப்பதற்கு 'சுதந்திரன்' வகுத்த நிபந்தனைகளைப் பற்றி அவர் என்ன நினைப்பார்?

ப: நான் மனேதத்துவ நிபுணன் அல்ல!

மோகா நிலாம்
கொழும்பு-12.

கே: தமிழ் காங்கிரஸ் கட்சியும் தமிழரசுக் கட்சியும் ஒன்று சேர்ந்தால்...?

ப: உடனே தமிழ் மக்கள் இழந்துபோன உரிமைகள் அவ்வளவையும் சிங்கள ஏகாதிபத்தியம் வழங்கிவிடமாட்டாது!

கே: தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளெல்லாம் தோல்வியடைந்து விட்டனவே, ஏன்?

ப: தமிழரசுக் கட்சிதனது எந்தவொரு கோரிக்கையையும் இன்னும் விட்டுவிடவில்லையே! அப்படியிருக்கையில் எங்கே தோல்வி!

ஸ்ரீகாந்த்
அக்கரைப்பற்று.

கே: கர்ப்பத்தடைசெய்து கொள்வதை ஆண்களா அல்லது பெண்களா அதிகம் விரும்புகிறார்கள்?

ப: ஆண்கள்!

கே: திருவாளர் பொன்னர் ஒரு சினிமா நடிகரானல் எப்படி இருக்கும்?

ப: அவர் நடிக்கும் படம் ஒரே குத்துக்கரணமயமாக இருக்கும்!

சி. செல்வநாதன்
உடப்பு.

கே: ஒரு பள்ளிக்கூடம் யாரால் உண்டாக்கப்படுகிறது?

ப: அங்கு பயிலப்போகும் மாணவர்களால்!

கே: காந்தியைக் கொன்றவனின் பெயர் என்ன? அவன் எந்த சமயத்தைச் சேர்ந்தவன்?

ப: நாதுராம் கோட்சே என்னும் இந்துவெறியன்!

தா. பாஸ்கரன்
கரணவாய்தெற்கு.

கே; அமரர் கு. வன்னியசிங்கத்தின் சேவையைப் போல இப்போது உள்ள எந்தப்பிரதிநிதி சேவை செய்கிறார்?

ப: என்னல்பதில் சொல்ல முடியாத ஒரு கேள்வியைப் போட்டுவிட்டீர்களே! யாரும் இருந்தாலல்லவா சொல்வதற்கு!

அலெச்சாண்டர்
தாழங்குடா.

கே: பகலும் இரவும் எப்போதும் ஒரே மாதிரி இருக்குமா?

ப: இருக்கும்- இருகண்ணும் குருடாகி விட்டால்!

தாளையூர் முருகுப்பிள்ளை
தாழங்குடா.

கே: குரங்கில்இருந்து பிறந்தவன் மனிதன் என்பதற்கு ஆதாரம் உண்டா?

ப: கட்சி விட்டுக் கட்சி பாயும் அரசியல் வாதிகள் இருக்கிறார்களே!

கே: ஒருமனிதனல் செய்ய முடியாத காரியம் எது?

ப: சாவை வெல்லுதல்!

சி. யோகலிங்கம்
கைதடி சந்தி.

கே; எங்கள் எம். பி. நவம் அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடப போவதில்லையென்று கூறியதாக தினப்புழுகில் ஒருசெய்தி வந்ததே உண்மையா?

ப: உங்கள் எம். பி. பதவி ஆசையற்றவர். எம். பீ. பதவிக்காக கட்சியில் ஒட்டியிருப்பவர் அல்லர். ஆனல் தினப்புழுகு செய்தி முற்றிலும் ஆதாரமற்றது:

கே: மேயர் தேர்தலில் தமிழரசும் காங்கிரசும் இணையுமா?

ப: அப்படி இணைந்தால் அந்த இணைப்பு அரசியற் கொள்கை அடிப்படையிலல்ல: யாழ். மாநகரத்துக்கு செம்மையான நிர்வாகத்தை ஏற்படுத்தவே!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி.
கொழும்பு-12




# நிலவு

## பாண்டித்துமிலன்

நீலவானிடைக் கோலநித்திலம்
சூழநின்ெறுரு மேடையில்
வாலைநர்த்தகி யாடுகின்றதோர்
வண்ணமாதவள் தோன்றுவாள்
பாலினைப்பனி யாக்கியோர்புதுப்
பாத்திரத்தினில் வார்த்தபோல்
ஞாலமீதிலே ஆடுகின்றனள்
கோலவெண்மதிக் குமரியாள்

★

சாலையெங்கணும் சந்து பொந்தெலாம்
கீதம் கேட்குது பாலர்கள்
கூடி நின்ெறுரு ஆட்டமாடிடக்
குமரிவெண்மதி தோன்றினுள்
வேலைசோலிகள் மீதமுள்ளவர்
வெண்ணிலவொளி தன்னிடை
மீதிவேலையிற் பாதிவேலையாய்
மிஞ்சவந்தது வெண்ணிலா

★

ஆலையின் நிழல் அண்டையே ஒளி
அள்ளி வீசுது பாலெனச்
சோலையிற்புது மாமலரவள்
சுந்தரத்தமிழ்க் கன்னியாய்
நாளைவந்திடு நாயகன் தனை
நங்கைகண்டு சிரித்திடும்
வேளைமுன்னமே தோழியாயிவள்
வெண்மதியிங்கு தோன்றினுள்

★

ஓலைக்கீற்றிடை ஆடுதென்றலும்
ஒன்று சேர்ந்தனர் மூவராய்
கீழைவானிடைக் கேசரிவரும்
வேளைபார்த்திடு தோழியர்
காலைசெங்கதிர் காணுமட்டிலும்
கதைகள் பேசிடக் கன்னியர்
நாளையென்ெறுரு வேளையானது
நங்கை வெண்ணிலா சென்றனள்

★

# புது யுகம்!

## "பாண்டியூரன்"

பூப்பதும் காய்ப்பதும் ஓர்
புதுயுகம் இல்லை அன்பே!
சாப்பிடுகின்ற வேலை
சனங்களெல்லாரும் செய்வார்
மூப்பிலும், முனையிலும், சா
முனையிலும், முடிந்த பின்னும்
கூப்பிய கரத்தா லோம்பும்
குழந்தைகள் பெறவேண்டும் நாம்

அதோ ஒரு செவ்வரத்தை
அலர்ந்தது; அந்தி வேளை......
இதழ்களின் இதழில் சோகை
ஏறியே இழந்த தின்பம்!
அதுவென நமது வாழ்க்கை
ஆகுதல் அழகோ? வாடாப்
புதியபூங் கொத்தில் பிஞ்சு
புறப்பட வேண்டாமோ? சொல்;

புறப்படுகின்ற பிஞ்சு
புல்லியில் வீழ்ந்திடாமல்
புறத்தினைப் புகட்டு சேய்க்குப்
புகழுடம் பளிக்கின்றேன்யான்;
நறுமலர் ஈன்ற பேறு
நாட்பட நாட்படத்தன்
நிறத்திலும் நிறைவிலும் பொன்
நிலவுபோல் கனிய வேண்டும்.

மழை வெயில் மலரின் மாற்றுன்
வண்டுகள் மாய்த்திடாமல்
இளமையின் பொலிவினேடுன்
இதழ் சுவை பொழியும் பூக்கள்
பழந்தரும் வேளையில் அப்
பயன் விதையாக வேண்டும்
இழந்த செல்வங்களை நம்
ஈன்ற சேய் ஈட்ட வேண்டும்.


# அச்சகத்தோரே!
# அச்சம் வேண்டாம்!!

இறக்குமதிக் கட்டுப்பாட்டினுல் புதிய அச்சுக்களை வாங்க முடியவில்லையே என்று ஏங்க வேண்டாம்

இறக்குமதி அச்சுக்களை விட ஏற்ற மிகு அச்சுக்களை இலங்கையிலே வார்த்துக் கொடுக்கின்றேம்.

புதிய தமிழ் ஆங்கில அச்சுக்கள்

விபரங்களுக்கு

சுதந்திரன் அச்சுவார்ப்பகம்

194 ஏ, பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

தொலைபேசி: 23411 த. பெ. 1183


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# தமிழரசாரிடம் பழியைப் போடுவது அறநெறியாகுமா?

சிங்களம் படிப்பதற்கு ஒப்புக்கொண்டு அரசாங்க சேவையில் சேர்ந்த இரு புதிய தமிழ் ஊழியர்கள் சிங்களம் படிக்க திட்டவட்டமாக மறுத்து விட்டதால் சேவையிலிருந்து கடந்த வாரம் நீக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்டளவு சிங்களத் தேர்ச்சி பெறுவோம் என்ற நிபந்தனையை ஏற்று அரசாங்க சேவையிற் சேர்ந்த இவ்வூழியர்கள், தாம் சிங்களம் படிக்க மறுப்பதால் வேலையை இழப்போம் என்று முன்கூட்டியே தெளிவாக தெரிந்து கொண்டுதான் அவ்வாறு நடந்து கொண்டிருக்கிறார்கள் என்றே நம்புகிறோம்.

அரசாங்க உத்தியோக மோகம் தான் இந்த நாட்டில் தமிழினத்தின் சுதந்திரப் போராட்டத்துக்கு ஒரு தடைக்கல்லாகவிருந்து வருகிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. இந்நிலையில் வேலை இழக்கப் போகிறோம் என்பதை முன்கூட்டியே தெரிந்து கொண்டு விளைவைப்பற்றிக் கவலைப்படாது உத்தியோகத்தை விட்டெறிந்த குறித்த புதிய தமிழ் அரசாங்க ஊழியர்களின் துணிவைப் பாராட்டுகிறோம்.

இவ்விளைஞர்களின் துணிவும் வைராக்கியமும் அரசாங்க உத்தியோகமோகத்தில் சிக்கிக்கொண்டிருக்கும் இன்றைய தமிழ் சமுதாயத்தின் கண்களைத் திறக்க வேண்டுமென்பதே நமது பெருவிருப்பாகும்.

வேலையை விட்டெறிந்த இப்புதிய ஊழியர்கள் அரசாங்க உத்தியோகத்தில் தொடர்ந்திருக்க வேண்டுமென்று ஆசை கொண்டிருந்தால், சிங்களம் படிப்பதற்கு ஆரம்பத்தில் தாமேஒப்புக்கொண்ட நிபந்தனையிலிருந்து மீறுமல் மேலும் காலக்கெடு கேட்டிருப்பர். கேட்டிருந்தால் அரசாங்கமும் அளித்திருக்கும்; சிங்களத்தில் தேர்ச்சி பெறத்தவறிய பல புதிய தமிழ்ஊழியர்களுக்கு இப்பொழுது அரசாங்கம் மேலும் காலக்கெடு வழங்கி வருகிறது;

ஆனால், தம் சொந்த விருப்பத்தின் பேரிலோ அல்லது தாம் சார்ந்துள்ள தொழிற் சங்கத்தின் ஆலோசனையின் பேரிலேயோ, சேவையிற் சேரும்போது சேவை நிபந்தனைகளில் ஒன்றாக ஒப்புக்கொண்ட சிங்களத் தேர்ச்சிவிதியை ஏற்றுக் கொள்ள மாட்டோமென விளக்கங் கொடுத்ததன் பேரில், இவ்வூழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். வேலை நீக்கம் செய்யப்பட்டனர் என்பதை விட வேலையை தாங்களாகவே நீத்தார்கள் என்பதே சாலப் பொருந்தும்.

இந்நிலையில், இதை வைத்துக் கொண்டு தமிழரசுக்கட்சிக்கு சாணியடித்து விடலாமெனச் சிலர் முயன்று வருகின்றனர். தமிழரசுக்கட்சியின் கொள்கையினால் தான் இவ்வூழியர்கள் வேலையிழந்ததாகச் சந்தர்ப்பவாதிகளும், அரசியல் எதிரிகளும் ஒரு பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றனர். இப்பிரசாரத்தினால் தமிழ் பேசும் மக்களிடத்தில் தமிழரசார் பற்றி ஒரு தவறான எண்ணத்தை ஏற்படுத்திவிடப் படாதபாடு பட்டு வருகின்றனர்;

தமிழரசுக்கட்சி 1956-ம் ஆண்டிலிருந்து 1965 மார்ச் மாதம் தேசியஅரசாங்கம் ஏற்பட்ட நாள்வரை தமிழ் ஊழியர்கள்—புதிய, பழைய ஊழியர்கள் அனைவரையும்—சிங்களம் படிக்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டது என்பதைத் துளியும் நாம் மறுக்கவில்லை.

ஆனால் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஐ. தே. கட்சி தமிழரசாருடன் பேச்சு வார்த்தை நடத்தியபோது தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்சினைக்கே முதலில் ஒரு தீர்வு காண முயற்சிக்கப்பட்டது.

இப்பேச்சு வார்த்தைகளின் விளைவாக சிங்களத் தேர்ச்சியின்மையால் கட்டாய ஓய்வில் அனுப்பப்படவிருந்த ஆயிரக் கணக்கான பழைய ஊழியர்களுக்குப் பெரு நிம்மதி ஏற்பட்டது. ஆம், பழைய ஊழியர்கள் 55 வயதுவரை, எந்தவித சிங்களக் கெடுபிடியுமின்றித் தங்கள் சம்பள உயர்வு, பதவி உயர்வு பெற்று அரசாங்க சேவையில் இருக்கலாம் என்பதை அரசாங்கம் ஒப்புக் கொண்டது. அதுவரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சம்பள உயர்வும் அவர்களுக்கு ஒரு சேர வழங்கப்பட்டது.

இது தமிழரசார் ஈட்டிய ஒரு பெருவெற்றியென்பதை மனச் சாட்சியை அடகு வைத்தவர்கள் தவிர மற்றவர்கள் அனைவரும் ஒப்புக் கொள்ளவே செய்வர்.

அடுத்து புதிய ஊழியர் பிரச்சினை விவாதிக்கப்பட்டது. புதிய ஊழியர்கள் அனைவருக்கும் சிங்களத் தேர்ச்சி நிபந்தனையிலிருந்து விதிவிலக்கு பெற்றுக் கொடுக்கத் தமிழரசுக்கட்சி முயன்றது என்றாலும் அதில் வெற்றிபெற முடியவில்லை. புதிய ஊழியர்கள் சேவையில் சேரும்போதே சிங்கள தேர்ச்சியையும் ஒரு நிபந்தனையாக ஏற்றுக்கொண்டவர்கள் என்பதை அரசாங்கம் சுட்டிக்காட்டியபோது தமிழரசார் அப்பிரச்சினையில் விட்டுக்கொடுக்கவேண்டியதைத் தவிர வேறு வழி அப்பொழுது இருக்கவில்லை.

ஆனால், புதிய ஊழியர்களிலும் எழுதுவினைஞர் தரத்தை சேராத, ஏனைய பலதுறை சேவைகளில் உள்ளோருக்கு சிங்களத் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்குப். பெற்றுக்கொடுப்பதில் தமிழரசுக் கட்சி வெற்றி பெற்றது.

தமிழரசுக் கட்சியில்லாவிட்டால், தமிழ் ஆசிரியர்களும்; தமிழ் தட்டெழுத்தாளர்களும், சுருக்கெழுத்தாளர்களும், மற்றும் பலரும் சிங்களம் படித்தே தீர வேண்டிய நிலையில் இன்று இருந்திருப்பார்கள் என்பதை யாராவது மறுக்க முடியுமா?

எனவே 1965ம் ஆண்டு மார்ச் மாதம், தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்சினை மீது தமிழரசாருக்கும் அரசாங்கத்துக்குமிடையே ஒரு தீர்வு ஏற்பட்டபின்னர்—தமிழ்மொழிச் சட்டவிதிகள் நிறைவேற்றப்பட்ட பின்னர்—புதிய ஊழியர்களை சிங்களம் படிக்கவேண்டாமென தமிழரசார் கேட்டுக் கொள்ளவுமில்லை; அவர்கள் சிங்களம் படிப்பதை தடுக்கவுமில்லை.

ஏற்கெனவே சிங்களம் பயில ஒப்புக்கொண்டு அரசாங்க சேவையில் சேர்ந்த புதிய ஊழியர்கள், சிங்களம் படிப்பதற்கான காலத் தவணையை 1965லிருந்து 1968 வரை மேலும் மூன்றாண்டுகள் நீடித்துக்கொடுத்ததும் தமிழரசார் முயற்சியென்பதை யாரும் மறுக்க முடியாது.

குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சிங்களத்தில் தேர்ச்சிபெறத் தவறிய புதிய ஊழியர்களுக்கு மேலும் காலம் வழங்குமாறு தமிழரசார் விடுத்த கோரிக்கையை தாம் நிதானத்துடன் கவனிப்பதாக பிரதமர் வாக்களித்துள்ளார். ஒவ்வொரு புதிய ஊழியரிடமும் தனித்தனி விளக்கம் கோரப்பட்டு மேலும் காலத்தவணை அளிக்கப்பட்டு வருகிறது.

இன்னும் அரசாங்க சேவையில் எங்கெங்கு சிங்கள நிபந்தனைகளை அகற்றி தமிழ் ஊழியர்களுக்குள்ள பளுவைக் குறைக்கமுடியுமோ அதையெல்லாம் தமிழரசார் செய்து கொண்டுதானிருக்கிறார்கள். பழைய ஊழியர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள 55 வயது கெடுவை அகற்றவும் முயற்சித்துக் கொண்டுதானிருக்கின்றனர்.

அதே போல புதிய ஊழியர்களுக்கு நடத்தப்படும் சிங்களச் சோதனையின் கூடுதலான தரத்தைக் குறைக்கவும் தமிழரசார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் தம் சொந்த விருப்பத்தின் பேரில்-அரசாங்க சேவையில் சேரும்போது தாமே ஒப்புக் கொண்ட சிங்கள நிபந்தனையை மீறி சில புதிய ஊழியர்கள் வேலையை இழக்கிறார்கள் என்றால் அதற்குரிய [illegible] தமிழரசாரிடம் போடுவது அறநெறியாகாதென்பதை இங்கு [illegible] விரும்புகிறோம்.

# பிசுபிசுத்த வேலை நிறுத்தமும் தமிழ் ஊழியர் நிலைமையும்!

இன்றைய அரசாங்கம் தோன்றிய நாள்தொட்டு அதை வீழ்த்தி விடுவதற்கு பலதடவைகள் பல்வேறு தந்திரோபாயங்களையும் கையாண்டு வந்த கூட்டுக் கட்சிகள், இறுதியில் அரசாங்க ஊழியர்களை ஏவிவிட்டு அக்காரியத்தைச் சாதித்துவிட முயன்றன: அம்முயற்சியின் பெறுபேறுதான் அரசாங்க ஊழியர்களின் வேலை நிறுத்தம்.

தமக்குசார்பானதொழிற் சங்கங்களின் தலைவர்களையெல்லாம் கைக்குள் போட்டுக் கொண்டு ஒரு மாபெரும் வேலை நிறுத்தத்தை நடத்தி அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட முயன்ற கூட்டுக் கட்சிகளின் இறுதி முயற்சியும் முறியடிக்கப்பட்டு விட்டது. ஆம், வேலை நிறுத்தம் படுதோல்வியில் முடிவடைந்து விட்டது.

எண்ணிய எண்ணமெங்கே இலக்கண குமாரனெங்கே, கன்னனும் தேருமெங்கே, யென்று கூறப்பட்டது போல, அரசாங்க ஊழியர்கள் எதற்காக வேலை நிறுத்தம் ஆரம்பித்தார்களோ அதையெல்லாம் மறந்து இன்று வேலை கிடைத்தால் போதும்; தண்டனை கிடையாமலிருந்தால் போதும் என்ற அளவுக்கு வாலைச் சுருட்டிக் கொண்டு வேலைக்குத் திரும்பி விட்டனர்.

ஆனால் இந்நிலையில் அரசாங்கத்துக்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். கூட்டுக் கட்சிகளின்சூழ்ச்சித் திட்டப்படி நடத்தப்பட்ட வேலைநிறுத்தத்தில் பெரும்பாலான தமிழ் ஊழியர்கள் பங்குபற்ற மறுத்துவேலைக்கு சென்றார்கள். தெளிவாகச் சொல்லப்போனால், வேலை நிறுத்தநாட்களில் அரசாங்க வேலைகள் சுமுகமாக நடைபெற்றதென்றால், அதற்கு முழுக்க முழுக்க காரணம் தமிழ் ஊழியர்களே.

தமிழ் ஊழியர்களும்வேலை நிறுத்தத்திலிறங்கியிருந்திருந்தால் அரசாங்கம் ஆட்டம் கண்டிருக்கும். சிங்களத் தேர்ச்சிபெறத்தவறியதமிழ் அரசாங்க ஊழியர்கள் விஷயத்தில் அரசாங்கம் கெடுபிடி காட்டி வந்த போதிலும், தமிழ் ஊழியர்கள் அரசாங்கத்தைப் போல அற்பத்தனமாக நடக்கமுன்வரவில்லை. அவர்கள் பெருந்தன்மையோடு—நியாயத்தோடு வேலை நிறுத்தத்தில் பங்குபற்ற மறுத்து தேசப்பணியில் ஈடுபட்டார்கள்.

(9-ம் பக்கம் பார்க்க)

# இலங்கை அரசின் பாரபட்சம் மீண்டும் ஊர்ஜிதம்!

தேசிய அரசாங்கம் என்று கூறப்படும் டட்லி அரசாங்கமும், முன்னைய சுதந்திரக்கட்சி அரசாங்கம் காட்டிச் சென்ற வகுப்பு வாதப் பாதையிலே தான் சென்று கொண்டிருக்கிறதா என்ற ஐயம் அண்மைக் காலமாக தமிழ்பேசும் மக்களிடையே எழுந்துள்ளது தெரிந்ததே. இந்த ஐயத்தைச் சென்ற வாரம் நடந்த மற்றோர் நடவடிக்கை தெட்டத் தெளிவாக உணர்த்திவிட்டது.

விதேசியத்தை எதிர்த்து சுதேசியத்தை நிலைநாட்டி, சைவத்தையும் தமிழையும் காத்த ஆறுமுகநாவலர், சுவாமி விபுலானந்தர் போன்ற தமிழ்த் துறவிகளின் ஞாபகார்த்தமாக முத்திரை வெளியிடும்படி இந்நாட்டிலுள்ள தமிழ் மக்கள் பல ஆண்டுகளாக கரடியாகக் கத்தி வருகிறார்கள். அரசியற் கட்சிகள், எழுத்தாள, இலக்கிய அமைப்புக்கள், மற்றும் பொது அமைப்புக்களும் இக்கோரிக்கையை நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றன. இருந்தும் அவை செவிடன் காதில் ஊதிய சங்காகி விட்டன.

அண்மையில நாவலர் முத்திரை சம்பந்தமாக கிளிநொச்சி பா. உ. திரு. இரத்தினம் நிதியமைச்சருக்குக் கடிதம் எழுதியிருந்தார். அதற்கு பிரதமருடன்கலந்து பேசி நாவலர் முத்திரை வெளியிடுவதாக நிதியமைச்சர் பதில் கொடுத்ததாகச் செய்திகள் வெளிவந்தன. விஷயம் அத்துடன் சரி. நாவலர் விழாக்கள், நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு முடிந்தும் விட்டன; முத்திரை பற்றி மூச்சு பேச்சில்லை,

ஆனால் சென்ற வாரம், அகில இலங்கைப் பௌத்த காங்கிரசின் பொன் விழாவைச் சிறப்பிப்பதற்காக அவசர அவசரமாக முத்திரை வெளியிட்டிருக்கிறது அரசாங்கம். அரசாங்கத்தின் பாரபட்சமான போக்கை இதுஒன்றே மிகத் தெளிவாக உணர்த்தப் போதுமானது.

பௌத்த சங்கத்தின்விழாவுக்கு முத்திரை வெளியிடட்டும். நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் நாவலர் முத்திரைக்கு என்ன நடந்தது என்பதே நமது கேள்வியாகும்.

பௌத்த சிங்களவர்களுக்கும் ஏனைய சிறுபான்மைச் சமூகங்களுக்குமிடையே சிறிய விஷயங்களில் கூட எவ்வளவு பாரபட்சம் காட்டப்பட்டு வருகிறது என்பதற்கு இச்சம்பவம் ஒரு உதாரணமாகும்.

அப்படிப் பாரபட்சமாக நடக்கவில்லையென்று அரசாங்கம் கூறுமானால், நாவலர் முத்திரையை தாமதமின்றி வெளியிடட்டும், அத்துடன் தமிழ்மறை தந்த வள்ளுவனாரின் 2000 ஆவது ஆண்டு நினைவுவிழா தமிழ் கூறும் நல் லுலகெங்கும்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார பல்கலைக் கழகம் என ஒன்றும் கிடையாது!

## தமிழ்ப் பல்கலைக் கழகத்துள் இந்து கலாசாரமும் அடங்கும்! டாக்டர் விமலானந்தா கருத்து!

"திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரஸ் இந்து கலாசார பல்கலைக் கழகமும், திரு. சா. ஜே. வே. செல்வநாயகத்தை தலைவராகக் கொண்ட சமஷ்டிக்கட்சி தமிழ்ப் பல்கலைக்கழகமும் கோரி வருகின்றன.

'முதலில், நடைமுறையில் 'கலாசார பல்கலைக்கழகம்' என்று குறிப்பிட்டுக் கூறுவதற்கு ஒன்றும் கிடையாது. ஏனெனில் எல்லாப் பல்கலைக் கழகங்களுமே அறிவுக் கூடங்களாகவும் கல்விச் சாலைகளாகவும் விளங்குவது போல கலாசாரத்தை வளர்க்கும் இடங்களாகவும் விளங்கி வருகின்றன. பல்கலைக் கழகங்களில் ஏற்படுத்தப்படும் கலாசார பீடங்களின் துணையுடன் எந்த ஒரு கலாசாரத்தையும் அல்லது கலாசாரங்களையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

'ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம், கிறிஸ்தவ கலாசாரத்தைப்படிப்பதற்கு அளிக்கும் அதேயளவுபூரண வாய்ப்புக்களையும் இந்து கலாசாரக் கல்விக்கும் அளிக்கவே செய்யும்.

'அத்தகைய தொரு பல்கலைக்கழகத்தில் உண்மையிலேயே இருக்க வேண்டிய தனித்தன்மை வாய்ந்த முக்கியத்துவம் எதுவென்ருல், அப்பல்கலைக்கழகத்தின் போதனு மொழி தமிழ் மொழியாக இருக்க வேண்டியதாகும்.'

—இவ்வாறு டாக்டர் ரி. விமலானந்தா என்பவர் 'சன்' ஆங்கில ஏட்டில் டிசம்பர் 8ம் திகதி எழுதியுள்ள ஒரு கட்டுரையில் தெரிவித்துள்ளார். இத்தகைய தமிழ்ப் பல்கலைக் கழகம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலக்கிய உலகு

-"வேதாளம்"-

### எழுத்தாள மன்றங்களுக்கு ஒரு யோசனை!

நமது எழுத்தாளப்புலிகளின் உணர்ச்சி வெறும் சோடாப் போத்தல் உணர்ச்சிதான்போங்கள்! இல்லாவிட்டால், இலங்கையில், புற்றீசல் போல் தோன்றிய எழுத்தாளர் சங்கங்களில் ஒன்ருவது—வெறும் பெயருக்காவது—இயங்கி வருகிறதா? அப்பப்பா கொஞ்சக்காலம் தான் எத்தனை சங்கங்கள்?

யாழ்ப்பாணத்தில் தோன்றிய தமிழ் எழுத்தாளர் மன்றம் மக்கிமடிய புதியதொரு யாழ் இலக்கிய வட்டம் அதிலிருந்து தோன்றியது. அண்மைக் காலத்தில் துணிவுடன் இலக்கிய பரிசோதனைகளில் ஈடுபட்டு வந்த பெருமை யாழ் இலக்கிய வட்டத்திற்கே உரியது. மாதாமாதம் பட்டிமன்றங்கள் நடத்திவந்ததுடன் சிறுகதை வாசித்தல் போன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தும் நூல்களை வெளியிட்டும் வந்தது.

ஆனுல் யாழ். இலக்கிய வட்டத்தினரிடமும் இப்போது சிலகாலமாகபுதிய 'உசார்' எதுவும் தென்படவில்லை. ஏனே இந்தச் சோர்வு?

மூனுப் போவன்னுவின் கதை என்றே முடிந்து சாம்பராகிவிட்டது. கொழும்புத் தமிழ் எழுத்தாளா மன்றம் ஒன்றும் தோன்றி கருவிலேயே சமாதியாகி விட்டது. புதிதாக தோன்றிய கொழும்பு இலக்கிய வட்டமும் அதே நிலைக்குத் தான் செல்வதாகக் கேள்வி.

மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் மன்றமும் மலைநாட்டுத் தமிழ் எழுத்தாளர் மன்றமும் அப்போதைக்கப்போது ஒவ்வொரு விழா நடத்துவதுடன் திருப்தியடைந்து வருகின்றன.

இப்பொழுது பெயரளவிலாவது இயங்கிக் கொண்டிருக்கும் தமிழ் எழுத்தாளர் மன்றங்களுக்கும இலக்கிய அமைப்புகளுக்கும் வேதாளம் விடுக்கும் வேண்டுகோள் இது தான்.

அகில இலங்கை ரீதியிலான ஓர் எழுத்தாளர் மாநாட்டை ஒவ்வோர் ஆண்டும் கூட்டி அதில் ஈழத்து இலக்கிய வளர்ச்சி பற்றி கருத்தரங்கும் புதிய உத்திகள் திறனுய்வு போன்ற துறைகளில் புதிய பரிசோதனைகளும் பட்டிமன்றங்களும்நடத்த முயற்சியெடுத்தீர்களானுல், நமது இலக்கியத் துறை வளர்ச்சியில் அது ஒருமைக்கல்லாக அமையுமல்லவா?

### இலக்கிய விருந்தாளிக்கு கௌரவக் குறைவா?

சமீபத்தில் ஈழத்துக்கு விஜயம் செய்திருந்த தமிழ் நாட்டுச் இலக்கிய சஞ்சிகையொன்றின் ஆசிரியரும் பிரபல எழுத்தாளருமாகிய ஒருவரை—அவரை அழைத்தவர்கள்-தகுந்த முறையில் கௌரவித்து அனுப்பத்தவறி விட்டார்கள் என்றசெய்தி வேதாளத்தின் காதுகளுக்கு எட்டியிருக்கிறது.

மலைநாட்டு [illegible] ஒன்றுதான் குறித்த இலக்கிய அன்பரை அழைத்திருந்தது. அவரது வருகை பற்றி பத்திரிகைகளுக்கு சரியான தகவல் எதுவும் கொடுக்கப்படாததால், பத்திரிகைகளும் அவரது செய்திகளை இருட்டடிப்பு செய்துவிட்டனவாம். பத்து, பதினைந்து பேரைக் கொண்ட "மாபெரும் கூட்டங்களில்" அவரிடம் பேசும்படி கேட்கப்பட்டதாம்,

கடந்த ஆண்டு குறித்த எழுத்தாளர் இலங்கைக்கு வந்திருந்தபோது மிகச் சிறந்த முறையில் வரவேற்று உபசரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. கடைசிநாளன்று அவரை வழியனுப்பி வைப்பதற்கு விமான நிலையத்துக்கு கூட எவரும் செல்லவில்லையாம் இறுதியில், அவருக்கு ஏன் இலங்கைக்கு வந்தோம் என்று ஆகிவிட்டதாம்.

### ஐவர் வட்டத்திடம் ஒரு கேள்வி

ஆபாசமான சினிமா நடிகைகளின் வர்ணப் படங்களையும் வரலாறுகளையும் தாங்கி, பாலுணர்வைத்தூண்டிவிடும் தென்னிந்திய சினிமாப் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும்தடைசெய்துஇலங்கையின் பத்திரிகைவளர்ச்சிக்கும் தரமான இலக்கிய சஞ்சிகையின் தோற்றத்திறகும் உதவி செய்யும்படி கோரும் ஓர் தீர்மானத்தை நிறைவேற்றி கொழும்பு ஐவர் வட்டம் ஏற்றுமதி இறக்குமதித் திணைக்களத் தலைவருக்கு அனுப்பியுள்ளதாம்.

நல்ல முயற்சி, நல்ல தீர்மானம்! ஐவர் வட்டத்தினருக்கு வேதாளத்தின் பாராட்டுக்கள். ஆனுல் ஐவர் வட்டத்தினரிடம் வேதாளம் போடும் ஒரு கேள்வி இதுதான்.

பாலுணர்வைத் தூண் [illegible] படங்களையும் செய்திகளையும் தாங்கி வந்துகொண்டிருக்கும் உள்ளூர்ப் பத்திரிகைகளுக்கு எதிராக என்ன நடவடிக்கை யெடுக்கப் போகிறீர்கள்? இறக்குமதியாகும் வெளிநாட்டுப் பத்திரிகைகளைவிட உள்ளூரில் உற்பத்தியாகும் மஞ்சள் கடதாசிகளால்தான் மக்களுக்கு அதிகம்தீமை ஏற்படுகிறதென்பது வேதாளத்தின் தாழ்மையான அபிப்பிராயம்.

## மக்கள் குரல்

### கேட்டதும் இரசித்ததும்; —ஒரு கருத்து—

11.12.1968 சுதந்திரனைப படித்தேன். கேட்டதும் ரசித்ததும் என்ற தலைப்பில் வெளியாகியிருந்த செய்தி என் கவனத்தைக் கவர்ந்தது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் நடைபெறும் தில்லுமுல்லுகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் இ. ஒ. கூ. தாபனத்திற்காக வக்காலத்து வாங்கவோ அன்றி அது பற்றிய எனது அபிப்பிராயத்தை வெளியிடவோ இக்கடிதத்தை எழுதவில்லை. அது எனது நோக்கமுமல்ல. ஆயினும் எனது பெயரும் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதால் சில கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

ஒரு ஜனநாயக நாட்டில் எந்தவொரு விஷயத்தைப் பற்றியும் எவரும் தத்தமது கருத்தைத் தெரிவிப்பதில் தவறு இல்லை. உரிமையும் இருக்கிறது. அதை வரவேற்பவள் நான. நான் எழுதிய "பதியும் பதவியும்" என்ற நாடகத்தைப்பற்றிக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்ததைத் தவருகக் கொள்ளவில்லை. அதையிட்டு நான் துளியும்கவலைப்படவுமில்லை. அதே சமயம் பத்திரிகாதர்மத்தை தாங்கள் உண்மையாக அனுஷ்டித்து எனது கருத்தையும் வெளியிடுவீர்கள் என்ற நம்பிக்கையில் இதை எழுதுகிறேன்.

"பதியும் பதவியும்"என்ற நாடகத்தில் என்ன புதுமை இருந்ததெனச் சுழியோடித் தேடினுலும்யாராலும்கண்டு பிடிக்கமுடியாது. எழுதிப் பழகுபவர்களுக்கு இடமளிக்கப்படுகிறதா? என 'அசரீரி' யின் குரல் ஒலித்திருந்தது.

நான் எழுதிய நாடகத்தில் இல்லாத புதுமையா? என்று வரிந்து கட்டிக்கொண்டு நான் இதை எழுதவில்லை. புதுமை இருந்ததோ இல்லையோ எனத் தீர்மானித்திருக்கவேண்டியவர்கள் முதலில் இ. ஒ. கூ. தாபனத்தார், பின்னர் நேயர்கள். நான் எழுதிய நாடகத்தை அப்படியே இங்கே வாசகர்களின் முன் சமர்ப்பிக்க முடியாவிட்டாலும், அதன் கதைச் சுருக்கத்தை இங்கே தருகிறேன். அதில் புதுமை இருக்கிறதா இல்லையா என்பதைச் சுழியோடிக் கண்டு பிடிக்கும் பொறுப்பை வாசகர்களிடமே ஒப்படைக்கிறேன்..

ஓர் அலுவலகத்தை மையமாக வைத்துப் புனையப்பட்ட இந்நாடகத்தில், பியோன் பரமகுருவின் மீது, நிர்வாக உத்தியோகம் வகிக்கப் புதிதாக வந்து சேரும் நீலவேணிக்குக் காதல் பிறக்கிறது. பரமகுருவையே கல்யாணம் செய்து கொள்கிருள். அலுவலகத்தில் பியோனுகப் பணி புரியும் பரமகுருவுக்கு வீட்டிலும் தன் மனைவி என்ற நிலையிலும் பார்க்க நீலவேணி தன் எஜமாட்டி என்ற உணர்வே மேலிடுகிறது. இதற்கேற்ருற் போல் நீலவேணியும் பரமகுருவைத் தன் கணவனைப் போல மதியாது, பியோன் என்ற நிலையிலேயே வைத்து நடத்துகிருள். இதையறிந்த தலைமைக்குமாஸ்தாமூர்த்தி பரமகுருவுக்குப்புத்திசொல்லிக்கொடுக்கிருர். அதன் படி பரமகுரு நீலவேணியைத் தனது மனைவி என்பதை உணரச் செய்ய எடுத்த முயற்சிகள் பலனளிக்காமல் போகவே வேறுவழியின்றி, நீலவேணியை அடித்துக் கொடுமைப் படுத்துகிருன். அப்பொழுதுதான் நீலவேணியின் உண்மையான உள்ளத்தை நாம் அறிய முடிகிறது.

சிறு வயதில் நீலவேணியும் பரமகுருவும் ஒன்ருகப் படித்தவர்கள் என்பதும், சந்தர்ப்பத்தால், தான் பெரியபதவி யடைந்துவிட்டதாகவும், அதே போன்ற ஒரு சந்தர்ப்பத்தை ஏன் தானே ஏற்படுத்திக் கொடுக்கக் கூடாதென்ற எண்ணத்தில், அவனையே கலியாணம் முடித்தாலும், பரமகுருவுக்கோ தான் பியோன் என்ற தாழ்வு மனப்பான்மை மேலோங்க, அதைத் தகர்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் கொடுமைக் காரியாக நடித்தாள் என்பதும் தெரிய வருகிறது,

என்னதான் இருந்தாலும் ஒரு பெண்ணுக்குப் பதவி பெரிதல்ல. பதியே தெய்வம் என்ற கருத்தையும், எந்த மனிதனையும் தாழ்வு மனப்பான்மை சிறுகச் சிறுக அழித்து விடும் என்றமையக் கருத்தையும் வைத்து எழுதப்பட்டதே இந் நாடகம்.

இதில் புதுமைஇருக்கிறதா இல்லையா என்பதை நான் எப்படிச் சொல்ல முடியும்? ஆனுல் ஒரே ஒரு உண்மையை மட்டும் இங்கு நான் ஒப்புக் கொண்டுதானுக வேண்டும். அதாவது நான் எழுதிப் பழகி கொண்டிருக்கிறேன் என்பதுமட்டும் உண்மையே-கடந்த ஏழெட்டு ஆண்டுகளாக நானும் வானெலி நாடகங்கள் எழுதிப் பழகிக் கொண்டு தானிருக்கிறேன், அவ்வப்போது ஒலிபரப்பாகிக் கொண்டும் வருகின்றது. புதுமையென்பது பார்ப்பவர்களின் கண்ணேட்டத்தைப் பொறுத்தது என்பதே எனது அபிப்பிராயம்.

ஜீ. நல்லம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னைக் கடிதம்:

# என். சி. சி. மீது டெல்லிக்கும் தமிழக

## கூட்டணியிலிருந்து பிளவுபட்டதால் இடது

தேசிய மாணவர் படைக்கான (என். சி. சி.) இந்தி ஆணைச் சொற்களை ஆங்கிலச் சொற்களாக மாற்றவேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை டெல்லி மத்திய அரசு முற்றுமுழுதாகப் புறக்கணித்துவிட்டது. அத்துடன், தேசிய மாணவர் படை செயல்படமுடியாது என்று எந்த மாநில அரசும் கூறமுடியாது என்றும் டெல்லி ஆட்சி அறிவித்துவிட்டது.

ஆனால் தமிழக அரசோ எந்தவிதமான விளைவுகள் ஏற்பட்டாலும், தேசிய மாணவர் படைக்கான இந்தி ஆணைச் சொற்கள் ஆங்கிலத்துக்கு மாற்றப் படாவிட்டால், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தேசிய மாணவர் படையை மீண்டும் ஆரம்பிப்பதில்லையென்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டது. இந்நிலையில் இப்பிரச்சினை மீது டெல்லிக்கும் தி. மு. க. ஆட்சிக்கும் மோதல் ஏற்படுமா என்று அரசியல் வட்டாரங்கள் கேட்கின்றன.

தமிழக அரசு, இந்தியை தமிழ் நாட்டிலிருந்து முற்றாக ஒழித்துக்கட்டிவிட்டு, தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டு அதையே சகல துறைகளிலும் அமுல் நடத்தி வருகிறது. இரு மொழிக் கொள்கையை பின்பற்றியே தேசிய மாணவர் படைக்கான இந்தி ஆணைச் சொற்களை உபயோகிக்கவேண்டும் என்று மத்திய அட்சியிடம் தி.மு.க. ஆட்சி கோரியிருந்தது. அத்துடன் இதுபற்றி டெல்லி ஒரு முடிவுக்கு வரும் வரை தேசிய மாணவர் படை இயங்குவதையும் தி.மு.க. ஆட்சி நிறுத்தி வைத்தது.

இப்பிரச்... யின் முடிவு... தாமதம்... அண்மையி... பாதுகாப்... அமைச்சர்... இருஷ்ண... கோரிக்கை... ஆட்சி நிர...

---

பிரவேசப் பத்திரம்

ஒவ்வொரு சொல்லையும் மிகக் கவனமாகப் படித்துவிட்டு பிரவேசப் பத்திரத்தை வெட்டிப் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள், பிரவேசப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுதல் கஷ்டமாகலாம்.

### கட்டுரை—எலிபன்ட் ஹவுஸ் பற்றிய சில உண்மைகள்.

75 ஆண்டு நிரம்பப் பெற்ற வர்த்தக ஸ்தாபனமாகிய சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்டின் தலைமைக் காரியாலயந்தான் எலிபன்ட் ஹவுஸ். இந்த வர்த்தக ஸ்தாபனத்திற்குக் கண்டியிலும் திருகோணமலையிலும் கிளைகள் உண்டு. பௌண்டன் கபேயும், தெல்தெனியாவில விக்டோரியா எஸ்டேட்டிலுள்ள இலங்கையின் மிகப் பெரிய தனியார் துறைக் கால்நடைப் பண்ணையும், இந்த ஸ்தாபனத்திற்குச் சொந்தமானவை. (யானை மார்க் குளிர் பானங்கள் மிக முக்கியமாகப் பலரும் விரும்பும் ஒறேஞ்ஜ் பார்லி (orange barley)— உயர்ந்த ரகத்திற்கும், சுத்தத்திற்கும் பெயர் பெற்றவை.) இந்த ஸ்தாபனத்தின் தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் இலங்கையிலுள்ள மிகப் பெரியதும் மிகச் சிறந்ததுமாகும். ஆகவே அதன் சோடா (soda) மிக உயர்ந்ததென ஏற்றுக்கொள்ளப்படுதல் இயல்பே. லெமனேட் (lemonade) போன்று—அது இப்பொழுது கூடிய இனிப்புடன் வருகிறது. யானை மார்க் குளிர் பானங்கள் எப்பொழுதும் பெரிய போத்தல்களில் வருவதால், சிக்கனமான குடும்பப் பெண்கள் அவற்றைப் பெரிதும் விரும்புகிறார்கள். அவர்கள் பேயாவ (peyawa) வையும் இப்பொழுது வீட்டில் கைவசம் வைத்திருக்கப் பழகிவிட்டார்கள். காரணம், சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்தக் குளிர்பானம் தடிமல், இருமல், தலைவலி, மதக் களைசல், காய்ச்சல் முதலியவற்றிற்குரிய ஆயுள்வேத ஔடதங்களைக் கொண்டிருக்கிறது என்பதே.

எலிபன்ட் ஹவுஸ், போத்தல்களிற் பால்-அடைப்பதற்கான பிரமாண்டமான இயந்திரத்தை வைத்திருப்பதோடு, உயர்தர பழரசங்களையும் தயாரிக்கிறது. ஒறேஞ்ச், (orange) பிளாக் கரண்ட் (blackcurrent) லெமன், (lemon) கிறேப்புறுற், (grapefruit) பஷன், (passion) முதலியவையும், லங்கா லைம், (lanka-lime) லைம் ஜூஸ் அண்ட் சோடா (limejuice & soda) ஆகியன செயற்கையான எலுமிச்சையும் இதில் அடங்கும். மற்றும் இருபதிற்கதிகமான சுவைகளில் எலிபன்ட் ஹவுஸ் ஐஸ்கிறீம் வெளியாகின்றது. இவை மிகவும் சுத்தமும் உயர்ந்த போஷாக்குமுடையனவென்று மதிக்கப்படுகின்றன. இவற்றுடன் பத்து சதத்திற்கு விற்பனையாகும் ஐஸ்பழம், அண்மையில் சேர்க்கப்பட்டுள்ளதொன்றாகும். தேன் இனிப்பான கோல்டன்-சிறப் (golden syrup) மற்றொரு புதிய எலிபன்ட் ஹவுஸ் தயாரிப்பு. வயது வந்தோர் தமது குடிபானங்களோடு கலந்து உட்கொள்ள யானை மார்க் ரொனிக், (tonic) டிறை ஜிஞ்ஜர் ஏல், (dry ginger ale) ஆகியவற்றையே குறிப்பிட்டுக் கேட்கிறார்கள். பெண்கள் மத்தியில் பெரிய மதிப்புப் பெற்றுள்ளவை பிற்றர் லெமன் (bitter lemon) புதிய சீனிக் கலப்பற்ற, இனிப்பான ஸ்லிம்-லைம் (slim lime) ஆகியன.

குடும்பத்திற்குத் தேவையான பாதுகாத்து வைக்கக்கூடிய மாமிச உணவுகள் பலவற்றையும் எலிபன்ட் ஹவுஸ் அளிக்கிறது. பலவகையான சோசேஜுகள் (பன்றியிறைச்சி), மாட்டிறைச்சி, மீன்), சப்போலாடாஸ், போக்கீஸ்! பொரித்த மாட்டிறைச்சி, புதிய தயாரிப்பான ஸ்பைஸ்ட் லிங்குஸ் (spiced lingus) மற்றும் பக் & ஸ்ரீக்கி பேகன் (Back and Streaky Bacon) ஸ்மோக்ட் ஹாம் (smoked ham), சமைத்த ஹாம், இவற்றுடன் சலாமி, மதிய போசன இறைச்சி, சான்ட்விச்சுடன் இன்பமாக உட்கொள்ளக்கூடிய அரைத்த ஈரல் முதலிய சமைத்த உணவுகளுமுண்டு.


எலிபன்ட் ஹவுஸிற்கு வருபவர்கள் இலங்கையிலுள்ள மிகப்பிரமாண்டமான ஐஸ் தொழிற்சாலையையும், கார்பன் டை ஒக்சைட் (carbon-di oxide) தொழிற்சாலையையும் நேரில் பார்க்க முடியும். எலிபன்ட் ஹவுஸைப் பார்க்க வரும் மாணவர் கோஷ்டிகள் தங்களது விஜயம் சுவாரஸ்யமாகவும், கல்வி புகட்டக்கூடியதாகவும் இருக்கக் காண்பார்கள். தங்களது அபிமானமுள்ள சிகப்பு-நிற நெக்டோ (necto) அல்லது நுரைத்தெழும் கிறீம் சோடா (cream soda) வை அருந்தி அவர்களின் விஜயத்தைச் சந்தோஷமாக முடித்துக்கொள்வார்கள்.

நத்தார் காலத்தில் எலிபன்ட் ஹவுஸ் நத்தார் கேக், சொக்கலேத் யூல் லொக், (chocolate yule-log), அதி விசேஷ கிறிஸ்மஸ் புடிங், (christmas pudding) மின்ஸ் பைஸ் (mince pies) ஆகியவற்றைத் தயாரித்தளிக்கிறது. வழமைபோல சொக்கலேற் கேக், (chocolate cake) டண்டீ கேக், (dundee cake) மடீரா கேக், (madeira cake) லவ் கேக், (love cake) பட்டர் கேக், (butter cake) வெடிங் கேக், (wedding cake) ஆகியன எப்பொழுதுமே கிடைக்கின்றன. இராப்போசன விருந்துகள், டான்ஸ் பார்ட்டிகள், கொக்டெயில் பார்ட்டிகள், குழந்தைகள் பார்ட்டிகள், திருமண வைபவங்கள் முதலியவற்றிற்குத் தேவையான முதற்தர விருந்துபசாரச் சேவை வேண்டுவோர் முதலில் விரும்புவது எலிபன்ட் ஹவுஸைத்தான், இவ்வைபவங்களிலெல்லாம லங்கா ஒறேஞ்ச (lanka orange), ஜிஞ்ஜர் பியர், (ginger beer) ஆகியன மிகவும் விரும்பி நாடப்படுபவை. பௌண்டன் கபேயிலும் விருந்து உணவு உபசரணை ஓர் தனித்துவம் பெற்ற கலையாக மேற்கொள்ளப்படுகிறது. இது கொழும்பிலுள்ளது. பௌண்டன் கபே குடும்பத்திற்கேற்ற சுக-போக உணவுச் சாலை-இங்கு போயா தினங்களில் ரூ. 12/-க்கு நால்வர் அடங்கிய ஒரு குடும்பத்திற்கு மதியபோசனமளிக்கப்படுகிறது.


இங்கே இப்பொழுதே கத்தரியுங்கள்.

காலியான சதுரங்களை இடமிருந்து வலமாக ஆங்கிலத்தில் நிரப்புங்கள். ஒவ்வொரு பந்தியிலும் எமது பல்வேறு இனங்கள் அனைத்தும் இருக்கின்றன

கறுப்புப் பந்தி



சிகப்புப் பந்தி



சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், அதன் அனுமதிபெற்ற வியாபாரிகள், கிறன்ட் அட்வரைசிங் (இலங்கை) லிமிட்டெட், யூனவோஸல் மெற்றல் கிரௌண்கோர்க் கம்பனி, ஆகியவற்றைச் சேர்ந்த ஊழியர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் இப்போட்டியிற் கலந்து கொள்ளமுடியாது.

● இப்போட்டி முடிவுகள் பற்றி எவ்விதக் கடிதத் தொடர்பும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

எலிபன்ட் ஹவுஸ் — சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் லிமிட்டெட் நிர்வாகஸ்தர்களின் தீர்ப்பே முடிவானது.

மேலே கொடுக்கப்பட்டுள்ள கட்டுரையில் வரும் யானை மார்க் குளிர்பான வகைகளின் தமிழ் பெயர்களின் (ஆங்கிலத்தை அல்ல) கீழே கோடிட்டுவிட்டீர்களா? கோடிடாவிடில் நீங்கள் தகுதியை இழக்க நேரிடும்.

போட்டியாளரின் பெயர்.........................

விலாசம்.........................

.........................

18 வயதுக்குட்பட்டால் (அ) வயது.........................

(ஆ பாடசாலை.........................

உங்களுடைய வாடிக்கையான விற்பனையாளர் பெயர்.........................

.........................

விலாசம்.........................

.........................

.........................

CCS எலிபன்ட் ஹவுஸ்
சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ழகத்துக்கும் மோதல் ஏற்படுமா?

## ...துசாரி கம்யூனிஸ்டுக்கு நட்டம்!

**துணை அமைச்சர் அறிவிப்பு**

இப்பிரச்சினைமீது டெல்லியின் முடிவு வருவதில் காலதாமதம் ஏற்பட்டுவந்தது. அண்மையில்தான் டெல்லி பாதுகாப்புத்துறை துணை அமைச்சர் திரு. எம். ஆர். கிருஷ்ணா தமிழக அரசின் கோரிக்கையை டெல்லி ஆட்சி நிராகரித்துவிட்டது என்று தெரிவித்தார். இந்தி ஆணைச் சொற்களே தேசிய மாணவர்படையில் தொடர்ந்து உபயோகிக்கப்பட வேண்டும் என்றும், அவற்றுக்குப் பதிலாக ஆங்கிலச் சொற்கள் உபயோகிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது என்றும் அறிவித்துள்ளார்.

"நாடு முழுவதும் புரிந்து கொள்ள ஒருமொழி இருக்க வேண்டும் என்று டெல்லி விரும்புகிறது. இந்தி ஆணைச் சொற்களைப் புரிந்துகொள்வது எந்த மாநிலத்துக்கும் சிரமமாயிருப்பதாக நான் கருதவில்லை" என்று தெரிவித்த அவர், என். சி. சி.யை நிறுத்திவைப்பது சம்பந்தமாக தமிழக சட்ட மன்றம் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தைக் குறிப்பிடும்போது தான் அளிக்கும் பண உதவியை மட்டுமே மாநிலசட்டமன்றம் கட்டுப்படுத்தமுடியும். ஆனால் என். சி. சி. செயல்படமுடியாது என்று எந்த மாநில அரசும் உத்தரவிடமுடியாது" என்று கூறியுள்ளார்.

டெல்லி அமைச்சரின் இவ் வறிவிப்புக் குறித்து தமிழக அதிகாரிகள் வியப்புத் தெரிவித்துள்ளனர். கல்வி மாநில அரசைப் பொறுத்ததாக இருப்பதால், என். சி. சி.யை எந்த மாநில அரசும் நிறுத்தமுடியாது என்ற நிலையை மத்திய அரசு எவ்வாறு மேற்கொள்ளமுடியும் என்று அவர்கள் கேட்கின்றனர்.

எனினும் எந்த விளைவு ஏற்பட்டாலும் இந்தி ஆணைச் சொற்கள் ஆங்கிலத்துக்கு மாற்றப்படாவிட்டால் தேசிய மாண

(10-ம் பக்கம் பார்க்க)


யானை மார்க் குளிர்பானப் போத்தல்-மூடிப் போட்டி

இரண்டாங் கட்டம்


ரொக்கப் பரிசுகளாக ரூ.75,000/- க்குமதிகமான தொகை!

பிரவேசியுங்கள்: போத்தல்-மூடிப் போட்டியில்



முந்துபவர்களுக்கு மிகச் சிறந்த பயன்!
இந்த வரிசைப்படி ரொக்கப் பரிசுகளை வெல்லுங்கள்!
1ஆம் பரிசு — ரூ. 1,500/- 2ஆம் பரிசு — ரூ. 1,000/- 3ஆம் பரிசு — ரூ. 750/-
4ஆம் பரிசு — ரூ. 500/- 5ஆம் பரிசு ரூ. 350/-
மற்றும் பின்னர் பிரவேசிப்போருக்கென ரூ. 200/-வீதம் 245 பரிசுகளும்!
விருப்பினர்களுக்கு ரூ. 50/- வீதம் 250 பரிசுகளும் உண்டு!

இலவசமுமல்ல! 50 பாடசாலைகள் இலவசமாக விளையாட்டு உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்!



### போட்டியில் பிரவேசிக்கும் முறை

1. பிரவேசப் பத்திரத்திலுள்ள கட்டுரையைக் கவனமாகப் படித்து, அதில் வரும் ஏல்லா யானை மார்க் குளிர்பான வகைகளின் (தமிழ்) பெயர்களின் (ஆங்கிலத்தை அல்ல) கீழ் கோடிடுங்கள்.
2. வழிகாட்டியாக ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள எழுத்துக்களை உபயோகித்து, கோடிட்ட பெயர்களை பிரவேசப் பத்திரத்தின் இரண்டு பத்திகளிலும் நிரப்புங்கள்.
3. அடுத்ததாகப் பின்வருவனபோல யானை மார்க் போத்தல் மூடிகளை ஒவ்வொரு பத்தியிலுமுள்ள எழுத்துக்களுக்கேற்றதாகச் சேகரியுங்கள்:—

கறுப்புப்பத்தியில்:— நீங்கள் நிரப்பியுள்ள எழுத்துக்களுக் கேற்பக் கறுப்பு எழுத்துள்ள மூடிகளையும், ஏற்கனவே அச்சடப்பட்டுள்ள வழிகாட்டி எழுத்துக்களுக்குரிய சிவப்பு எழுத்துள்ள மூடிகளையும் சேகரியுங்கள்.

சிவப்புப்பத்தியில்:— நீங்கள் நிரப்பியுள்ள எழுத்துக்களுக் கேற்பச் சிவப்பு-எழுத்துள்ள மூடிகளையும், ஏற்கனவே அச்சிடக் கொடுக்கப்பட்ட வழிகாட்டி எழுத்துக்களுக்குரிய கறுப்பு-எழுத்துள்ள மூடிகளையும் சேகரியுங்கள்.

குறிப்பு:- இந்தச்சிவப்பு கறுப்பு எழுத்துக்கள் யானை மார்க் போத்தல் மூடிகளில், தக்கைக்குக் கீழே உள்ள தகட்டில் அச்சிடப்பட்டுள்ளன. சில போத்தல் மூடிகளில் எழுத்துக்களில்லை.—அவை தேவைப்படுவனவல்ல.

4. மூழுத்தொகையான 248 சிகப்பு, கறுப்பு எழுத்துக்களுள்ள போத்தல் மூடிகளை நீங்கள் சேர்த்தவுடன், நீங்கள் நிரப்பிய பிரவேசப்பத்திரத்துடன், அவற்றை சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், லிபன்ட் ஹவுஸ் விற்பனை/விளம்பர மனேஜருக்கு எடுத்து வாருங்கள்; முதலில் வருபவருக்கு முதற்பரிசும், அடுத்தடுத்து வருபவர்களுக்கு அடுத்தடுத்த பரிசுகளுமாக வழங்கப்படும். இந்தப் போத்தல் மூடிப் போட்டியிற் பின்பு வருபவர்களுக்கென 250 பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலே கூறியபடி, ஏடுபவர்களுக்கு அதே வரிசைப்படி இந்தப் பரிசுகள் வழங்கப்படும். தபால் மூலம் அனுப்பப்படும் பிரவேசப் பத்திரங்கள் ஏற்று கொள்ளப்படமாட்டா.
5. விற்பனையாளர்களைக் குறிப்பிடுதல்
வெற்றி பெறும் ஒவ்வொருவரும் தமது வழமையான யானை மார்க் குளிர்பான விற்பனையாளரைக் குறிப்பிடும் உரிமை பெறுவர். இப்படியாகக் குறிப்பிடப்படும் விற்பனையாளர் பற்றிய விபரம் ஆதாரமுள்ளதா என்பதும், அவர் பரிசு பெறுபவரின் விலாசத்திலிருந்து எவ்வளவு சமீபத்திலிருக்கிறார் என்பதும் சரிபார்க்கப்பட்ட பின்னர் அவருக்கு ரூ. 50/- பரிசு வழங்கப்படும்.
6. பாடசாலைகளைத் தெரிவு செய்தல்
வெற்றி பெறும் 18 வயதிற்குட்பட்ட முதல் 50 மாணவர்களுக்கு டயஸ்/சான்ஸ் விளையாட்டு உபகரணங்கள் வாங்கக்கூடியதாக வவுச்சர் ஒவ்வொன்றும் ரூ. 200/- பெறுமதியான வவுச்சர்கள் பெற்றுக்கொள்ளக்கூடியதாகத் தத்தமது பாடசாலைகளைக் குறிப்பிடும் உரிமையுண்டு.
அப்படியான மாணவர்கள் அவர்களது வயதை உறுதிப் படுத்தியும், இந்த வவுச்சரைப் பாடசாலை ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறது என்றும் பாடசாலை அதிபரிடமிருந்து கடிதமொன்றைப் பெற்றுத் தமது பிரவேசப் பத்திரத்துடன் சமர்ப்பிக்கவேண்டும்.

இங்கே, இப்பொழுதே கத்தரியுங்கள்

பிரவேசப் பத்திரம்

ஒவ்வொரு சொல்லையும் மிகக் கவனமாகப் படித்துவிட்டு பிரவேசப் பத்திரத்தை வெட்டிப் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். பிரவேசப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுதல் கஷ்டமாகலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓர் நகைச்சுவை உரையாடல்!

# ஏழிலே செவ்வாய்!

(ஏகாம்பரம் கடை முதலாளி, இராமையா வேலையாள்).

ஏகா. இராமையா...ஏய் இராமையா...

இரா. (வந்து கொண்டு) வாறேன் ஐயா.

ஏகா. என்னது ஐயா?

இரா. பின்னை என்னண்டு சொல்லுறதீ ஐயா?

ஏகா. இந்தா பார் இராமையா, ஐயா பையா தேவையில்லை... நீ இவ்வளவு நேரமும் எங்கை போயிருந்தனி சொல்லு.

இரா. அது வந்து... பொன்...பொன் கடைக்குப் போட்டு வாறன்.

ஏகா. பொன்கடைக்கோ? ஏன், கலியாணத்துக்கு நாள் குறிச்சாச்சே? என்ரை கடையிலை நீ இருந்து கொண்டு பொன் கடைக்குத் திரிஞ்சியெண்டால் இந்த ஏகாம்பரத்தின்ரை யாவாரம் என்னவாகும்?

இரா. எங்கடை அலுவலாய்த்தான் போட்டு வாறன்...சீனி மூட்டை வந்திருக்கோவெண்டு நீங்கள் தானே பார்த்து வரச் சொன்னியள்.

ஏகா. பொன் கடையிலையோ?

இரா. நீங்கள் தானே 'ஐயா' போடவேண்டாமெண்டியள். பொன்னையா கடையிலை போய்த்தான் சீனி மூட்டை பார்த்து வந்தனான்.

ஏகா. ஐயா போடவேண்டாமெண்டதுக்குப் பொன்னையாவுக்குஐயாவை வெட்டிப் பொன்னுக்கியிருக்கிறார் இவர். பைத்தியக்காரனை வேலைக்கெடுத்த என்னைத்தான் சொல்லவேணும்.

இரா. ஏகாம்பர ஐயா ஒருதனைப் பார்த்து அவனுக்குப் பைத்தியம் எண்டு சொல்லுறவனுக்குத்தான் பைத்தியம் எண்டு பொன்னையா கடையிலை கதைச்சவை...

ஏகா. அப்ப உன்ரை அகராதிப்படி ஆருக்குப் பைத்தியமெண்டு நீ நினைக்கிறாய்?

இரா. உங்களுக்குத்தான்.

ஏகா. ஏய் இராமையா... என்ன தலையிலை மயிர் கிடக்கு?

இரா. எனக்கு மட்டுமே கிடக்கு? உங்களுக்கும் தானே.

ஏகா. அதைச் சொல்லேல்லை இராமையா...வெட்டின மயிர் அப்பிடியே ஒட்டிப் பிடிச்சுக்கொண்டிருக்கிறதைச் சொல்லுறன்...

இரா. அது வந்து மயிர் வெட்டிச்சுப் போட்டு வாறன்...

ஏகா. இராமையா, நீ உன்ரை மயிரை வெட்டிச்சுப்போட்டு வாறதுக்கு நான் உனக்குச் சம்பளம் தந்து இந்தக் கடையிலை வைச்சிருக்க வேணுமே?

இரா. அதிலை என்னபிழையிருக்கு முதலாளி? உங்கடை கடையிலையிருந்து வேலை செய்யிற நேரத்திலை வளந்த மயிரைத்தான் நான் இப்ப வெட்டிச்சுப் போட்டு வாறன்...

ஏகா. ஓகோ, இனிமேல் மயிர் வெட்டுறதுக்கும் ஒரு அலவன்சு வேணும் போலை?

இரா. முதலாளி, அடிக்கில் அலகிலை அடிச்சுப் போடாதையுங்கோ...பல்லெல்லாம் சூத்தை குத்திப் போச்சு...வேணுமெண்டால் முதுகிலை அடியுங்கோ...

ஏகா. உனக்கு இப்ப ஆர் அடிக்கிறதெண்டு சொன்னது?

இரா. அலகிலை ஐஞ்சு வேணுமோ எண்டு கேட்டியள் இப்ப...

ஏகா. ஐயோ, ஐயோ; இராமையா, இப்பத்தான் பார்க்கிறன் என்னது கையிலை?

இரா. கையிலேயோ? விரல்... விரலிலை வந்து...ஒரு கதை...பெரியகதை...

ஏகா: ஏன் நாவல் இல்லையோ?

இரா. ஏன் கேக்கிறியள்? எங்கடை பேச்சியம்மன் கோயிலடியிலை நிக்குதொண்டு.

ஏகா: என்ன நிக்குது?

இரா. நாவல் மரம்...பட்டைகிட்டை எடுக்கப்போறியளோ? இல்லாட்டிப் பழம் ஏதாவது வேணுமோ?

ஏகா. நானிருந்தன், அந்தப் பேச்சியம்மனிலை நிக்கிறதுதான் உன்னிலை வந்திட்டுதெண்டு...ம்ம்...கதையைச் சொல்லு.

இரா: ஏகாம்பர ஐயா, பேச்சி அம்மனுக்குப் பொங்கல் நடந்துது...

ஏகா. ஓம், நடந்துது...

இரா. பொங்கிப் படைக்கேக்கை வெடி சுட்டினம்...

ஏகா. நீயும் சுட்டியோ?

இரா. ஆறுதலாய்க் கேளுங்கோ முதலாளி... வெடியைக் கொழுத்திக் கையிலை வைச்சுக் கொண்டு மறந்துபோய் நெருப்புக் கொள்ளியை எறிஞ்சுபோட்டன்...வெடி கையிலை வெடிச்சுப்போச்சு...

ஏகா. காயம் பெரிசே?

இரா. இல்லை முதலாளி... இரண்டு விரலிலை பாதி பாதி பறந்து போச்சு...

## "நடமாடி"

ஏகா. அப்பபாதகமில்லை..; மிச்சம் நாலு விரல் கிடக்குத்தானே?

இரா. அதெப்பிடிச்சொல்லுறியள்? மூண்டு விரல் தானே? அதுவும்மிச்சமாய்க் கிடந்தது பேச்சியம்மன்ரை புண்ணியமெண்டு சொன்னவை...

ஏகா. இஞ்சை பார் இராமையா...பறந்த பாதியள் இரண்டு...பாதியும் பாதியும் ஒண்டுதானே?

இரா: நீங்கள் யாவாரக் கணக்குப் பாக்கிறியள் போலை கிடக்கு...

ஏகா. சரி இராமையா, காயத்துக்கு மருந்து போடேல்லையே?

இரா. போட்டனான்...

ஏகா. என்ன மருந்து?

இரா. அம்மியிலைகிடக்கு.; செலும்பு...

ஏகா. ஓமோம்...கழுதைப் புண்ணுக்குப் புழுதி மருந்தெண்டு சொல்லன்.

இரா. ஓம் முதலாளி. ஆசுபத்திரிக்கு மருந்துக்குப் போனால் கையை வெட்டிப் போடுவினமாம்...விரலும் போய் கையையும் ஏன் குடுப்பான்?

ஏகா. அது சரி இராமையா...நீ கலியாணம்செய்யிறதுக்குப் பெண் பார்த்தனியெண்டு சொன்னனி... கலியாணம் எந்த மட்டிலை நடக்கும்?

இரா. அது இப்ப கொஞ்சம் குழப்பத்திலை கிடக்கு முதலாளி...

ஏகா. ஏன்?

இரா. எனக்கு மேல்வீடு சரியில்லையெண்டு அந்தப் பெம்பிளை சொன்னவ...

ஏகா. ஏனும்?

இரா. எனக்கென்னெண்டு தெரியும்? அது தான் நான் உங்களிட்டை வந்து கீழ்வீட்டிலை ஒரு இடம் தாருங்கோவெண்டு கேட்டன்...

ஏகா. ஓ...அதுக்குத் தானே கீழ்வீட்டிலை இடங் கேட்டனி?

இரா. நீங்கள் மூட்டையிருக்கெண்டியள்...நான் டிடிரி மருந்து அடிப்பமென்ன, சீனி மூட்டைக்கோவெண்டு சிரிச்சியள்...

ஏகா. அதுக்குப் பிறகு என்ன நடந்தது?

இரா. நான்.போய்பொம்பிளையிட்டைச் சொன்னன் மேல் வீட்டைச் சரிக்கட்டுறனெண்டு...அடுத்த நாள் காலமை ஆளைக் காணேல்லை ...ஆரோ ஒரு பெடியனோடை ஓடிப் போயிட்டாளாம்...

ஏகா. எங்கை ஓடினவள் எண்டு தெரியாதே?

இரா. என்னட்டைச் சொல்லிப் போட்டுப்பே கேல்லை முதலாளி அவள்...

ஏகா. இராமையா, இப்ப உன்னுடைய முடிவென்ன?

இரா. ஓடிப்போனவன் திரும்பி வந்தாப்போலை அவளைக் கலியாணம் செய்யலாமெண்டு காத்திருக்கிறன்...

ஏகா. அடி சக்கையெண்டாராம்... ஏன் அவள் வடிவானவளோ?

(9-ம் பக்கம் பார்க்க)



# நத்தார் விழாவின் மகத்துவம்!

எல்லாச் செல்வமுமுள்ள வானுலக அரசன், வறுமையை விரும்பி, வறுமைக் கோலம் பூண்டு, பார்ப்போருக்குத் துன்ப உணர்ச்சியை ஊட்டக்கூடிய, மிருகங்கள் வந்துறையும் குகையில், குழந்தையாகப் பிறந்தார்,

மக்கள் இரட்சகர் மாட்டுக் குகையில் பிறந்தபோது வானகமும், மண்ணகமும் மகிழ்ந்தது.

அக்கிரமங்களால் அலைக்களிக்கப்பட்ட உலகத்தில், அன்பைப் பரப்பப் பிறந்துள்ள இயேசு பாலனை, அவனியோர் ஏற்றிப் போற்றிறல் மட்டும் போதாது என்று எண்ணி, இயற்கைப் பொருட்களான காற்றை; புதிய மலர்களை; மாமரத்து இளங்குயில்களை அழைத்து, இயேசு பாலனைப் போற்றுமாறு சூசை ஏவினனென்று வீரமாமுனிவர் இசைத்துள்ள பாடலொன்று, அமலன் பிறந்தபோது இவ்வவனிபெற்ற இன்பத்தை ஒருவகையில் எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

"களித்தநாளில்
அரும்பு தென்
காலே,
இனிதீங் கரும்புதியே!
துளித்தநானத்
தேனரும்பத்
துணர்நாண் மலர்காள்,
அரும்புதிரே!
விழித்தநாகு
மாங்குயில்காள்
விளைதேன்பாவை
அரும்புதிரே!"

குகையில் இயேசு பிறந்த செய்தியை, தேவதூதர் இடையர்களுக்குக் கூறியதுடன், அவர் பிறந்த இடத்தின் அடையாளமும் காட்டினர். உடனே, இடையர் அந்த இடத்துக்குச்சென்று, குழந்தையைப் பணிந்து தொழுதனர்.

அரபியநாட்டு அரசனும், பாரசீக நாட்டு மன்னனும், சப நாட்டு வேந்தனும், வானத்தில் தோன்றியுள்ள புதிய நட்சத்திரத்தைக் கண்டு, இயேசு இரட்சகர் பிறந்துவிட்டார் என்று தெளிந்து, அவரைக் கண்டு வணங்கும் நோக்கத்துடன் புறப்பட்டனர்.

இம்மன்னர்கள் செல்ல வேண்டிய திசைக்கு நட்சத்

### க. அந்தோனிப்பிள்ளை

திரம் வழிகாட்டியது. வேறு வேறு நாட்டிலிருந்து புறப்பட்ட மன்னர் மூவரும், ஒரு இடத்தில் ஒன்று சேர்ந்து செல்ல வழிகாட்டி வந்த நட்சத்திரம், பெத்திலேமிலுள்ள குகையின் மேலே அசைவற்று நிற்கக்கண்டு, மன்னர் மன்னராகிய இயேசு பிறந்த இடம் இது தான் என்று, அன்பும், மகிழ்ச்சியும் பொங்க குகையினுள் நுளைந்து, வணங்கி, தாம் பருசுப் பொருட்களாகக்கொண்டு சென்ற பொன், மீறை, தூபம், ஆகியவற்றைக் காணிக்கை செலுத்தினர்.

வான சாஸ்திரிகளும், தீர்க்கதரிசிகளுமான இம்மூமன்னர்களும், வானகமும் வையகமும் மகிழும்படியாக, தெய்வவடிவம் மறைத்து, வறுமையை ஏற்று, துயரம் நிறைந்த உருவெடுத்து இக்குகையினுள் பிறந்து கிடக்கும் இக்குழந்தை பல்லவா மக்களின் பாவப் புண்ணாற்றும் மருந்தாகி, சித்திரவதைக்குட்பட்டுச், சிலுவையில், ஆணியால் அறையுண்டு இறக்கப்போகின்றவர் என்று, உள்ளத்துள் அழுது புலம்பியதாக வீரமாமுனிவர் கூறுகின்றார்.

"மண்களிப்ப மனுவானாய்:
மனம் வருந்து
இத்துயர் கொள்
வடிவுற்றாயோ!
விண்களிப்ப உவப்பானாய்;
வெயில் வடிவம்
மறைந்தெஞ்ச
மிடிகொள்வாயோ"
கண்களிப்ப உருவானாய்;
கசடொழிப்ப
உள்ளிரங்கிக்
கலுழ்கு வாயோ!
புண்களிப்ப மருந்தானாய்;
புண்படமாள்
வாய்கொல்"!

உலகம் கொண்டிருந்த பாவமயக்கம் ஒழியவும்; துன்பம் நீங்கவும்; ஆணவம், அகந்தை என்ற பேயை வெல்லவும்; அன்பை அவனியில் பரப்பவும் மார்கழி இருபத்தைந்தாம் நாளில் மரியம்மாவின் திருமகனாய், இயேசு பிறந்ததை நினைவுபடுத்தி இரண்டாயிரம் நூற்றாண்டிலும் 'நத்தார் விழா' வெடுக்கும் நாம், இயேசு பிறப்பதற்கும், சிறப்பதற்கும் காரணமாய் இருந்த இவ்வுலகம் அவரின் உயர்ந்த இலட்சியங்களை உறுதியாகப் பற்றி உயர்வடைய உழைப்போமாக;

"பூமியில் நல்ல மனதுடையவர்களுக்குச் சமாதானம் உண்டாவதாக!"

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புகையிரத நிலையங்களில் தமிழ்க் கொலையா?

## உடனே எனக்கு அறிவியுங்கள்!

## தமிழ் மக்களுக்கு இரத்தினம் வேண்டுகோள்!

தமிழ் மக்களே! எங்காவது புகையிரத நிலையங்களில் தமிழ் கொலை நடைபெற்றிருந்தால் அவ்விபரங்களை உடனே எனக்குத் தெரிவியுங்கள். சிங்களச் சொற்கள் அப்படியே தமிழில் எழுதப்பட்டிருந்தால் அதையும் தெரிவியுங்கள் இக்குறைகளைக் களைவதற்கு நடவடிக்கையெடுக்கும்படி அரசாங்கத்தை வற்புறுத்துவதற்கு எனக்கு அது வசதியாக இருக்கும்.

இவ்வாறு கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா.பொ. இரத்தினம் தமிழ் மக்களுக்கு ஒருவேண்டுகோள் விடுத்துள்ளார்.

புகையிரத நிலையங்களின் பெயர்கள் பல முறையாக தமிழில் எழுதப்படவில்லை. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புகையிரத நிலையத்திற்கு 'சரசவி உயன' என்ற சிங்களச் சொல்லையே தமிழிலும் அப்புகையிரத நிலையத்தின் பெயராக எழுதப்பட்டுள்ளது. பேராதனைச்சந்தி என்று எழுதப்படவேண்டிய பெயர் பெரதனியச் சந்தி என்று எழுதப்பட்டுள்ளது.

இவ்வாறு மேலும் பல புகையிரத நிலையங்களின் பெயர்ப்பலகைகளில்தமிழ்ப் பெயர்முறையாக எழுதப்படவில்லையெனத் தெரிகிறது.

இக்குறையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கையெடுக்குமாறு அரசாங்கத்தைக் கேட்பதற்குமுன் இவ்வாறு சிங்களச் சொல் தமிழில் எழுதப்பட்டுள்ள புகையிரத நிலையங்களின் விபரங்களை தமக்கு அறிவிக்குமாறு திரு: இரத்தினம் தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புகையிரத நிலையங்களிலுள்ள பெயர்ப்பலகைகளில் நிலைய அதிபர்களின் பெயர்களைத் தமிழிலும் எழுதுமாறு அரசகரும மொழித் திணைக்களம் இலங்கைப் புகையிரதப் பகுதிக்கு உத்தரவிட்டுள்ளது.

திரு: இரத்தினம் எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்தே அரசகருமமொழித் திணைக்களம் இவ்வுத்தரவை விடுத்துள்ளது.

## ஏழிலை செவ் ...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இரா. அவ்வளவு குறையாய்ச் சொல்லக்குடாது முதலாளி...ஒரு கண்ணிலை தான் கொஞ்சம் வக்கிள் கிடக்கு...அது செல்வாக்காம்...

ஏகா. அதுக்குத்தான் இரண்டாம் மாப்பிளையாக நீ செய்ய இருகிறியோ...

இரா. இல்லை முதலாளி... இது இப்ப அவளுக்கு ஆறுவது...

ஏகா. அப்ப நீ அவளை ஏழாவது ஆளாக முடிக்க ஆயுத்தப்படுத்துருய் எண்டு சொல்லு...

இரா. ஓம் முதலாளி... அதிலை ஞாயம் கிடக்கு...

ஏகா. என்ன ஞாயம்?

இரா. அவளுக்கு ஏழிலை செவ்வாயாம்... ஏழாவது புருசனோடைதான் நல்லாய் வாழுவள் எண்டு சாத்திரம் சொன்னதாம்...அதுக்குத்தான்...!

## சாவகச்சேரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி எம். பி. யான திரு லட்மன் ஜெயக்கொடி.

திரு. ஜெயக்கொடி கேட்சவிருக்கும் கேள்விகள் வருமாறு:—

(அ) யாழ்ப்பாணம், ஸ்ரீ நாக விகாரையைச் சார்ந்த ''உத்தர லங்கா சிங்கள பௌத்த சங்கமய'' யாழ்ப்பாணம் அரசாங்க மாகாண அதிபருக்குக் கொடுத்த முடிக்குரிய காணிகளினதும் தனிப்பட்டவர் காணிகளினதும் விபரங்களைக் கொண்ட ஓர் நிரலைச் சமர்ப்பிப்பாரா? இல்லையெனில் ஏன்?

(ஆ) சாவக்கச்சேரி புகையிரத நிலையத்திற்கும் பஸ் வழிக்கும், ஐந்து மைல்களுக்கப்பாலுள்ள ''கெற்றிப்பாலி'' என்ற கிராமத்தில் 10ஏக்கர் வரண்ட காணியை மேற்கூறிய சங்கத்தின் 107 உறுப்பினர்களுக்கும் ஒதுக்க அரசாங்க மாகாண அதிபர் நடவடிக்கை எடுத்தாரா?

(இ) சங்கம் சமர்ப்பித்த நிரலிலுள்ள ஓர் காணித்துண்டு சிங்களவருக்கு ஒதுக்கப் படுமா? இல்லையெனில், ஏன்?

## தமிழாசிரியர்களும் இடமாற்றமும்!

தென்னிலங்கையில் பரந்துவாழும் தமிழ் மக்கள் தொடர்ந்து தமிழ்மக்களாக வாழவேண்டும் என்ற தழ்ழிணப்பற்று தமிழாசிரியர்களுச்கு இருக்குமாயின், பொது இடமாற்றத்திட்டத்தை தமிழ் ஆசிரியர்கள் எதிர்க்கக்கூடாது என அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் ஆசிரியர்சங்க பிரசாரச் செயலாளர் திரு. க. சுப்பிரமணியம், வடமராட்சியில் நடைபெற்ற ஓர் ஆசிரியசங்கக் கூட்டத்தில் உரையாற்றியபோது தெட்டத்தெளிவாக எடுத்துக்கூறியுள்ளார்.

திரு. சுப்பிரமணியத்தின் இக்கருத்தை வரிக்குவரி நாமும் ஏற்றுக்கொள்கிறோம். தென்னிலங்கையில் தமிழையும், தமிழினத்தையும் ஒழித்துக்கட்டுவதற்கு கல்வியமைச்சும், சிங்கள வகுப்புவாத சக்திகளும் மிக மும்முரமாக முயன்றுவருகின்றன என்ற உண்மை பகிரங்க ரகசியமானது. சிங்கள இனவெறியர்களின் இம்முயற்சியை முறியடித்து தேமதுரத் தமிழ் தென்னிலங்கையெங்கும் ஒலிக்க செய்யவும் அங்கு வாழும் தமிழர்களை தமிழ்ப்பற்றுள்ளவர்களாக உருவாக்குவதும், தமிழ் ஆசிரியர்களின் நீங்காக் கடமையாகும்.

சிங்களப்பகுதிகளில் பெருந்தொகையான தமிழர்கள் வாழுகிறுர்கள். இத்தமிழர்களை தொடர்ந்து தமிழர்களாக வாழவைக்க வேண்டிய பொறுப்பு அரசியல் வாதிகளைவிட, தமிழாசிரியர்களிடமே அதிகமாக உண்டு என்பது நமது கருத்தாகும்.

தென்னிலங்கையிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கு சென்று தமிழ்ப்பணியாற்றுவதற்கு தமிழ் ஆசிரியர்கள் தயங்குவார்களானுல் தமிழினம் சிறுகச் சிறுக இந்நாட்டிலிருந்து அழிந்துவிடுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

சிலாபம், நீர்கொழும்பு பகுதிகளில் வாழ்ந்த தமிழர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சரியான தமிழ்க்கல்வியூட்டதக்க வசதிகளின்றி சிங்களத்தைப் போதனுமொழியாக ஏற்ற காரணத்தால் எப்படி இன்று அவர்களது பரம்பரை சிங்கள மயமாக மாறிவிட்டதோ அதே போல, தென்னிலங்கையில் இன்று வாழும் இலட்சக்கணக்கான தமிழ்க் குடும்பங்களும் சிங்கள மயமாக வேண்டியதுதானு? இதை 'இடமாற்றத்தை எதிர்க்கும் தமிழாசிரியர்கள் சிந்திக்கவேண்டும்.

இன்று தென்னிலங்கையில் தமிழ்ப் பெற்றேர்கள் பலர் தங்கள்பகுதியில் தமிழ் கற்றுக் கொடுக்கச் சரியான தமிழாசிரியர்கள் இல்லாததாலும், தமிழ்ப் பாடசாலைகள் இல்லாததாலும் வேறு வழியின்றித் தம் பிள்ளைகளை சிங்களத்தைப் போதனுமொழியாகக் கொண்ட சிங்களப் பாடசாலைகளுக்கு அனுப்புகின்றனர். இப்பிள்ளைகள் தமிழ் மொழியையும் தமிழ்ப் பண்பையும் மறந்து எதிர்காலத்தில் சிங்களவர்களாக மாற வேண்டியதுதானு? இதை தமிழ் ஆசிரியர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்நாட்டிலே தமிழ்பேசும் மக்கள் சிறுபான்மையினர், சிறுபான்மையினராக இருந்து கொண்டே நம்பில் ஒரு பகுதியைப் பெரும்பான்மையினத்திற்குத் தாரை வார்க்கலாமா?

ஏனைய துறையிலுள்ளவர்களை விட, இந்நாட்டில் தமிழ் மொழியையும், தமிழ் பண்பையும், தமிழ் உணர்ச்சியையும், தமிழ் ஒருமைப்பாட்டையும் கட்டி வளர்க்க வேண்டிய கடமையும் பொறுப்பும் தமிழ் ஆசிரியர்களுக்குண்டு.

தென்னிலங்கைத் தமிழர்கள் சிறுகச் சிறுக சிங்களவர்களாக மாறுவதையும் தமிழினம் சிறுகச் சிறுக சிதைந்தொழிவதை விரும்பாத தமிழாசிரியர் எவரும் ஆசிரியஇடமாற்றத்தை எதிர்க்க மாட்டார்கள் என்பதே நமது தீர்க்கமான கருத்தாகும்.

## பிசுபிசுத்த...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எனவே தமிழ் ஊழியர்களின் தேசப்பணியிலும் கடமையுணர்விலும் அரசாங்கம் துளியும் சந்தேகிக்க முடியாது. இத்தகைய ஊழியர்கள்தான் இந்த நாட்டின் முன்னேற்றத்துக்கு இன்றியமையாதவர்கள். இதைப் பிரதமர் தெளிவாக உணருவார் ஏன்று நம்புகிறேம். அப்படி உணருவாராயின், தமிழ் ஊழியர்கள் மீது சிங்களத் தேர்ச்சியின்மைக்காக அரசாங்கம் எடுத்துவரும் கெடுபிடி நடவடிக்கைகளை தளர்த்தவே செய்வார்,

அதே நேரத்தில் வேலை நிறுத்தத்தில் படுதோல்வியடைந்து வேலைக்கு திரும்பியுள்ள கூட்டுக்கட்சி தொழிற்சங்க ஊழியர்களின் ஆத்திரம், இனி, கூடவேலைபார்க்கும் சக தமிழ் ஊழியர்கள் மீது திரும்பலாம். தமிழ் ஊழியர்களே வேலைநிறுத்தத்தை முறியடித்துவிட்டார்கள்என்று அத்தொழிற் சங்கவாதிகள் ஏற்கெனவே பிரசாரத்திலிறங்கிவிட்டனர்.

அரசாங்கத் திணைக்களங்களில் தமிழ்த் துவேஷம் தாராளமாக கட்டவிழ்த்து விடப்படக் கூடும். ஆகவே தமிழ் ஊழியர்கள் இப்பிரசாரங்களைக் கண்டு அதிர்ச்சியடையாமல் துணிந்து நிற்பார்களாக. தமிழ் ஊழியர்களுக்கு எதிராக நடத்தப்படும் துவேஷப் பிரசாரங்களை முளையிலேயே கிள்ளியெறியவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

## தமிழ்...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டனர் என்று பிரசாரம் நடக்கலாமென்றும், வேலை நிறுத்த நேரத்தில் எல்லா அரசாங்க அலுவலக வேலைகளும் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே நடத்தப்பட்டனவென்றும் ஒரு தமிழ் அரச ஊழியர் தெரிவித்தார்.

வெறுங்கையுடன் இப்போது வேலைக்கு திரும்பியுள்ள இத்தொழிற்சங்கவாதிகளின் ஆத்திரம் இனி சக தமிழ் ஊழியர்கள் மேற்பாயலாமென எதிர்பார்க்கப்படுகிறது: அரசாங்கத் திணைக்களங்களில் தமிழ் ஊழியர்களை கேவலப்படுத்தும் துவேஷப்பிரசாரம் இனிச் சில காலத்துக்கு தாராளமாக நடைபெறலாமெனத் தெரிகிறது.

குறிப்பாக வேலை நிறுத்த நேரத்தில் வேலைக்கு சென்ற தமிழ் ஊழியர்கள் உத்தியோக மொழிச் சட்டத்தை உதாசீனம் செய்து ஆங்கிலத்தை மீண்டும் புகுத்தி

## இலங்கை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சனவரியிலிருந்து மாபெரும் விழாவாகக் கொண்டாடப்படவிருக்கிறது. இதையொட்டி வள்ளுவர் உருவம் பொறித்த முத்திரையொன்றை இலங்கை அரசு வெளியிடுமானுல் அது நிச்சயம் இலங்கைத் தமிழ் மக்களின் உள்ளத்தைக் குளிர்விக்கும் என்று கூற விரும்புகிறேம்.






பாட்டாளி முதல் பணக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது

கமலாபீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்.

நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11

தொலைபேசி 3597—6522

தாமரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்லி அமைச்சர் சதி செய்வதாக கருத்திருமன் புகார்!

[7-ம்பக்கத் தொடர்ச்சி]

வர் படையை மீண்டும் ஆரம்பிப்பதில்லையென்று தி. மு. க. உறுதிபூண்டுள்ளது. எனவே இப்பிரச்சினை, மத்திய-மாநில அதிகாரங்களுக்கு விடுக்கப்படும் ஒரு சவாலாக திரிவுபெற்றுள்ளது. இப்பிரச்சினை மீது தமிழகத்துக்கும் டெல்லிக்கும் மோதல் ஏற்பட்டாலும் ஆச்சரியப்பட இடமில்லை.

### வானொலியில் இந்தி திணிப்பு

தமிழகத்தின்மீது இந்தியை 'புறக்கடை வழியாக' திணிக்கும் டெல்லியின் திட்டம் ஒன்றுக்கு தமிழக அரசும், தமிழக மக்களும் பலத்த எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். அகில இந்திய வானொலி நிகழ்ச்சிகளில் காலை 8 மணிக்கு ஆங்கிலச் செய்தி அறிவிக்கும் நடைமுறை இதுவரை இருந்துவந்துள்ளது. இப்போது ''அனுவசியமாக'' அந்நடைமுறையை மாற்றி அந்நேரத்தில் இந்தி செய்தி அறிக்கை வாசிக்கப்படுகிறது.

மறைமுகமாகத் தமிழக மக்கள் மீது இந்தியைத் திணிக்கும் இந்நடவடிக்கையை தமிழகத்து அரசியற்றலைவர்களும், அறிஞர்களும் கடுமையாக எதிர்த்துவருகின்றனர். திராவிட கழகத் தலைவர் ஈ. வெ. ரா. பெரியார், தமிழரசுக்கழகத் தலைவர் ம. பொ. சி, திருச்சி அறிஞர் முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், மதுரைப் பல்கலைக்கழக துணைவேந்தர் தெ.பொ.மீ, போன்றவர்கள் இதைக் கடுமையாக எதிர்த்துள்ளனர். மாணவர்களும் இதை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களில் இறங்கியுள்ளனர்.

டெல்லியின் இந்த முயற்சி பற்றி இந்தியின் ஆதிக்கம் புறக்கடை வழியாக நிலைநாட்டப்படும் முயற்சி நடக்கிறதோ என்று எண்ணுவதற்கு இடங்கொடுத்துவிட்டதென்றும், மத்திய ஆட்சியில் ஒரு பிரிவினருக்கு இந்தி ஆதிக்கத்தில் அக்கறை என்று கூறப்படுகிறதென்றும், இந்தி ஆதிக்கத்திட்டத்தின் ஒருபகுதியாக இதுஇருக்கலாமென்று மக்கள் சந்தேகப்படுவதற்கு இது இடந்தந்துவிட்டதென்றும் முதலமைச்சர் அறிஞர் அண்ணா தெரிவித்துள்ளார்.

சென்றவாரம் சென்னைக்கு விஜயம் செய்திருந்த மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. கே. கே. ஷாவையும் அண்ணா சந்தித்து மறைமுக இந்தித் திணிப்புக்கு தமிழக மக்களின் கடும் ஆட்சேபத்தை எடுத்துக் கூறியிருக்கிறார்.

ஃ ஃ ஃ

### அண்ணா விளக்கம்

தமிழக அரசு பரிசுச் சீட்டுத்திட்டம் ஒன்றை இப்போது அமுல் நடத்திவருவது தெரிந்ததே. இந்த திட்டத்தை ராஜாஜி எதிர்த்து வருகிறார். ராஜாஜியின் இவ்வெதிர்ப்பு பற்றி முதலமைச்சர் அண்ணா பின்வருமாறு கூறியுள்ளார்.

''ராஜாஜியிடம் எனக்கு மட்டற்ற மதிப்புண்டு. அவர் ஏதோ தமிழகப் பரிசு திட்டத்தை மாத்திரம்தான் கண்டிக்கிறார் என்று எவரும் கருதவேண்டியதில்லை. கேரளம், பஞ்சாப், ஹரியானா, மேற்கு வங்காளம் போன்ற இதர இராச்சியங்களும் இம்மாதிரித் திட்டங்களை அமுல் நடத்திவருகின்றன. ராஜாஜியின் புத்திமதி எல்லா மாநிலத்துக்கும்தான். அதன்படி ஏனைய மாநிலங்கள் இத்திட்டத்தை நிறுத்திவிட்டால் மறு வினாடியே நானும் நிறுத்திவிடத் தயாராக இருக்கிறேன். மற்ற மாநிலங்கள், இத்திட்டத்தின் மூலம் தம வருவாயைப் பெருப்பிக்கும போது தமிழகம் மாத்திரம் தனது வருவாயை இழந்துவிடவேண்டும் என்று கூறுவது சரியல்ல.''

ஃ ஃ ஃ

### கருத்திருமன் புகார்

காங்கிரசை சேர்ந்த மத்திய மந்திரியொருவருக்கு எதிராக தமிழ்நாடு சட்டமன்ற எதிர்ககட்சித் தலைவர் திரு. கருத்திருமன் ஒரு பெரிய புகாரைச் சுமத்தியுள்ளார். டெல்லி உணவு அமைச்சர் திரு. ஜகஜீவன் ராம் தமிழ் நாட்டில் உள்ள தி. மு. க.வின் கையைப் பலப்படுத்த மறைமுகமாக சதி செய்வதாக திரு. கருத்திருமன் பகிரங்கமாக சாடியுள்ளார்.

அதற்கு அவர் கூறிய ஒரு காரணத்தை கீழே தருகிறேன்.

''பீகாரில் மட்டரகமான அரிசி 56 ரூபாய்க்கு கொள் முதல் செய்யபபடுகிறது வங்காளத்திலும் கேரளாவிலும் 60 ரூபாய்க்கும் ஆந்திராவில் 56 ரூபாய்க்கும் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால் தமிழ் நாட்டில் 43 ரூபாதான் கொடுக்கிறார்கள். இதை நியாயம் என்று ஒப்புக்கொள்கிறாரே ஜகஜீவன் ராம்'' என்று கவலைப்பட்டிருக்கிறார் கருத்திருமன்.

### இடைத் தேர்தலும் இடதுசாரி கம்யூனிஸ்டும்

கடந்த பொதுத்தேர்தலின்போது ஏற்படுத்தப்பட்டு தேர்தலில் தி. மு. க. ஆட்சியைக் கைப்பற்றிய பின்பும் சினேகபாவத்துடன் இயங்கிவந்த தி. மு. க. கூட்டணியில் நடைபெறவிருக்கும் நாகர்கோவில் இடைத்தேர்தல் ஒரு விரிசலை ஏற்படுத்திவிட்டது.

நாகர்கோவிலை சுதந்திரக் கட்சிக்கு விட்டுக்கொடுக்க தி. மு. க. செய்த முடிவை இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. சுதந்திரக்கட்சி சார்பில் இத்தேர்தலில் போட்டியிடவிருந்த திரு. மத்தியாசு இறுதி நேரத்தில் சுயேச்சையாளராகப் போட்டியிடுகிறார். இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியை போட்டியிலிருந்து விலக்கிக்கொள்ள அண்ணா வகுத்த திட்டம் இது. ஆனால் பிடிவாதமாக நாகர்கோவிலில் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியும் தனது வேட்பாளரை போட்டிக்கு நிறுத்தியிருக்கிறது.

தி. மு. க., தனது ஆதரவு சுதந்திரக் கட்சி ஆதரவாளராக போட்டியிடும திரு. மத்தியாசுக்கே என்பதை திட்டவட்டமாக அறிவித்துவிட்டது.

இந்நிலையில் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிக்கு தி. மு. க. கூட்டணியில் இனிமேல் இடமிருக்கமுடியாது. கூட்டணியிலிருந்து இடதுசாரி கம்யூனிஸ்ட் வெளியேறினாலும்சரி, வெளியேற்றப்பட்டாலும்சரி, நஷ்டம் அக்கட்சிக்கே தவிர தி. மு. க.வுக்கு அல்ல. ஏனெனில் சென்ற தேர்தலில் தி.மு.க.வுடன் கூட்டுச்சேராதிருந்திருந்தால், இடதுசாரி கமயூனிஸ்ட் கட்சி ஒரு தொகுதியைக்கூட கைப்பற்றியிருக்கு [illegible] ளதே.

# "தமிழர்கள் அடைய வேண்டிய பெருமையை நம்முடைய காலத்திலேயே அடைவோம்"

## தி. மு. க. ஆட்சியின் முப்பெருஞ் சாதனைகள்

இந்த ஈராண்டுக் காலத்தில் நம் ஆட்சியில் வரலாற்றுச் சிறப்புக்குரிய காரியங்களைச் செய்திருக்கிறோம்! காங்கிரசார் மீண்டும் ஆட்சிக்கு வந்தாலும், நாங்கள் செய்துவிட்டுச் செல்லும் காரியத்தில் கைவைக்கும் துணிவு மட்டும் அவர்களுக்கு வராது!

''சில சட்டங்கள் ஐந்தாண்டுகள்வரை இருக்கும; வேறு சில சட்டஙகள் பத்தாண்டுகள் இருக்கும்; பிறகு மாற்றப்படக் கூடும்; ஆனால் இனி, தமிழகத்தை ஆள எந்தக் கட்சி வந்தாலும்சரி — காங்கிரசாரே மீண்டும வந்தாலும்சரி — தமிழ் நாடு என்று பெயர் மாற்றத் தீர்மானத்தை மாற்றுவது ஒருகாலும் நடக்காது—அவ்வளவு பெரிய காரியம் இது! இது மணலில் எழுதப்பட்ட எழுத்தல்ல கல்லிலே செதுக்கபபட்டது மல்ல—தமிழ் மக்களின் இதயத்திலே பொறிக்கப்பட்டது! வரலாற்று நிகழ்ச்சி என்றால், இப்படிப் பட்டதைத்தான் கூறுவார்கள்.



''காங்கிரசுக்காரர்கள் ஒரு காலத்தில் தலைகவிழ்ந்து, அண்ணாதுரை செய்ததை நாமே செய்திருககலாமே' என்று எண்ணுகிறபோது — அந்த எண்ணம் எழுகின்ற போது—தமிழகத்தை தி. மு. கழகம்தான் அரசாளுகின்றது' என்ற எண்ணம் ஏற்படும்! மககளை ஆளுவது மட்டும் ஆட்சியலல— மனத்தை ஆளுவதுமாகும் அது-தான் இன்றைய நிகழ்ச்சி!

''அதைப்போலவே, நெடுங்காலமாக நிலைத்துவிட்ட மண முறையை மாற்றிச் சுயமரியாதைத் திருமணங்களைச் சட்டப்படி செல்லத்தக்கதாகச் செய்தது வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியாகும்!

''இந்தி விருப்பப் பாடமாக வேண்டுமானால் இருக்கட்டும்; கட்டாய பாடமாக வேண்டாம்' என்று ஆரம்ப காலத்தில் கூறிவந்த நாம்—ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு இந்திக்கு இனி இங்கே இடமில்லை' என்று சட்டம் போட்டோம்!

'இந்த மூன்று வரலாற்று நிகழ்ச்சிகளும், எங்களிலே தனிப்பட்ட முறையில் எண்ணிப்பார்க்கிற நேரத்திலும்—கட்சி ரீதியாக எண்ணிப்பார்க்கிற நேரத்திலும் உள்ளபடி — பெருமிதமடையக்கூடிய நிகழ்ச்சிகள்! நமக்கு இதிலே பங்கு கிடைத்தது பற்றி எண்ணும்போது, பெருமகிழ்ச்சி இயற்கையாக எழுகிறது!

'ஆனால், 'தமிழ்நாடு' என்ற பெயரை மட்டும் வைத்துக்கொண்டு மற்றவற்றில் தமிழர்களாக வாழாமல், தமிழ் நெறி தவறியவர்களாக வாழ்ந்துகொண்டிருப்பதை நாம் மெல்ல மெல்ல — உறுதியாக மாற்யமைத்துக் கொள்ள வேண்டும்!

'எதிர்கால வேலை திட்டம் தெளிவாக இருக்கிறது! தமிழன் தமிழனாக வாழவேண்டும் — தமிழ் மொழியைப் போற்றவேண்டும்—மொழி காட்டும் வழியில் வாழ்க்கையை நடத்திச் செல்லவேண்டும்—அந்த வழியில் மற்றவர்களையும் அழைத்துச் செல்லவேண்டும்! இந்திய ஒருமைப்பாடு' என்பது அதை நோக்கிச் செல்ல வேண்டுமே தவிர தமிழகம் அதை நோக்கிச் செல்வது ஒருமைப்பாடு ஆகாது! ஆதலால் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்துவோம்!

'இந்த நன்னாள் நமக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் கிடைக்கச் செய்தது மட்டுமல்ல—இது மற்ற சிறப்புகளுக்கும நம்மை அழைத்துச செல்லும்! இந்தியக் குடியரசு எல்லைக்குட்பட்டு, தமிழ்நாட்டுக்கு உரிய அதிகாரம்— தமிழ்நாட்டிற்கு எல்லா வகையிலும் ஏற்றம் கிடைக்கக்கூடிய ஓர் அரசியல் மாறுதல்—நமக்குக் கிடைக்க வேண்டும்.

'காங்கிரசு நண்பர்கள் இதை எதிர்ப்பார்கள்; 'தமிழ்நாடு' என்ற பெயரை அவர்கள் எதிர்க்கத் தேவையில்லை—ஆனால் எதிர்த்தார்கள்! 'தமிழ்நாட்டிற்கு அதிக அதிகாரங்கள் கிடைக்க வேண்டும்' என்று எடுத்துச் சொல்லுகின்ற நேரத்தில், மூர்க்கத்தனமாக எதிர்த்தார்கள்—இன்னும் எதிர்ப்பார்கள்! அதைப்பற்றிக் கவலைப்படாமல் நாம், உற்சாகத்தோடும்—நம்பிக்கையோடும்—எழுச்சியோடும்—தமிழ்ப்பண்போடும் இந்த நாட்டை நடத்திச் சென்று தமிழர்கள் அடைய வேண்டிய பெருமையை நம்முடைய காலத்தில் பெற்றுத் தந்தோம்—பிறகுதான் கண் மூடினோம்' என்ற பெருமையை ஒவ்வொருவரும் பெறவேண்டும்.''

(தமிழ்நாடு பெயர் மாற்றத்தையொட்டி சென்னையில் நடந்த மகிழ்ச்சி விழாவில் அண்ணா நிகழ்த்திய உரையின் ஒரு பகுதி.)

---

## திரைவாணன் பதில்கள்

ஆர். கண்ணன்,
நீர்கொழும்பு.

கே: சிவாஜி மீண்டும் ஸ்டண்ட் படங்களில் நடிக்கிறாரா?

ப: இப்பொழுது அவர் நடித்துவரும் படங்களிலெல்லாம் ஸ்டண்ட் இடம்பெற்று வருகிறது!

ஃ

வை. ராஜகோபால்,
எட்டியாந்தோட்டை.

கே: நடிகர் திலகத்திடம் இருந்து என் லெட்டர் ஒன்றுக்கு பதில்லெட்டர் வாங்கி தர முடியுமா?

ப: நான் அவரது குமாஸ்தா என்று உமக்கு யார் சொன்னது?

த. பிரேமராஜா,
உரும்பிராய்.

கே; கடவுள், நல்லவரா? கெட்டவரா? நல்லவர்தான். சிவாஜி நல்லவரா? கெட்டவரா?

கே: சிவாஜி நல்ல நடிகர். படங்களிலும் நல்லவராக நடிப்பார்.

ஃ

மயில்வண்ணன்,
கல்போட.

கே: இதுவரை சிவாஜியும் எம். ஜி. ஆரும் எத்தனை படங்களில் நடித்துள்ளனர்?

ப: சிவாஜியின் 125-வது படமான ''உயர்ந்த மனிதனும்'' எம். ஜீ. ஆரின் 100வதுபடமான ஒளி விளக்கும் தமிழகத்தில் இப்போது வெற்றிநடை போடுகின்றன.

பி. எஸ். மார்க்கண்டு,
கழுதாவளை.

கண்ணதாசன் பாட்டெழுதிய படங்கள், வாலி பாட்டெழுதிய படங்கள் இரண்டிலும் அதிக நாள் ஓடிய படங்கள் வாலியினுடையதா கண்ணதாசனுடையதா?

ப: கண்ணதாசன் படங்கள்தாம்.

ஃ

மரியதாசன்,
உருத்திரபுரம்.

கே: ஜீவனாம்சம் படத்தில் புதுமுகம் லட்சுமியின் நடிப்பு எப்படி?

ப: பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்போது விஜயகுமாரியுடன் சேர்ந்து நடித்த இலட்சுமி நடிப்பதற்கு கேட்க வேண்டுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மாலை மங்கை இரவுமங்கை உலகைத் தன்அரவணைப்பில் ஆழ்த்திக் கொண்டிருந்தாள்! அநேகமாக அயல் வீடுகளிலெல்லாம் சத்தம் அடங்கி விட்டிருந்தது. அதனால் எல்லோரும் தூங்கி விட்டிருக்க வேண்டும் என விமலன் நினைத்தான். சிவகாமி கூடத்தான் தூங்கி விட்டாள். வழக்கமாகவே விமலன் பிந்திப் படுக்கைக்குச் செல்வதால் சிவகாமி தன்மேல் சந்தேகப்படுவாளோ என்ற பயமற்று அவன் வெளிப்புற வாயிற்படிமேல் ஏதோ சிந்தித்தபடி அமர்ந்திருந்தான். அவனது வீட்டு விளக்குகள் எல்லாம் அணைக்கப்பட்டிருந்தன. பாலன் வந்து தன்னை அழைத்து போவான் என்றுதான் அவன் காத்திருந்தான். ஆனால் பாலன் வந்தபாடாகவே இல்லை. தானாகவே போகலாம் என்றால் தன்னைக் கண்டு அந்தப் பெண் பைத்தியத்தில் ஏதாவது கூக்குரலிட்டுவிட்டால் தன் மானம் மட்டுமல்லாமல் குடும்பமானமும் போய் விடும் என்று அவனைத் தடுத்தது அவன் உள்ளம்.

அப்போது 'மாமா' என்றழைத்தபடி பாலன் அங்கு வந்தான். 'அம்மா உங்களை அழைத்து வரட்டாம் மாமா' என்று அவன் கூறி முடிக்குமுன்பே விமலன் எழுந்து அவனுடன் நடக்கத் தொடங்கினான். பாலனது வீட்டையடைந்தபோது விமலனின் இதயம் 'பட்பட்' என அடித்துக் கொண்டது. பாலன் அறைக்கதவைத் திறந்ததும் அச்சம் நிறைந்த விழிகளும் நடுங்கும் உடலுமாக விமலன் அந்த அறைக்குட் காலடி எடுத்து வைத்தான்.

அங்கே தலைவிரிகோலமும் கந்தல் ஆடையுமாகப் படுக்கையின்மேல் ஒரு பெண் அமர்ந்திருந்தாள். அதன் பக்கத்தில் ஒரு நாற்காலி போடப்பட்டிருந்தது. அந்தப் பெண்ணை நிமிர்ந்து பார்க்கவும் பயந்தவனாய் குனிந்த தலையுடன் விமலன் நின்றிருந்தபோது ''அப்படி உட்காருங்கள் மாமா நான் காப்பிகொண்டு வாறன்...'' என்றுபெரியமனிதன் போற் கூறிவிட்டு பாலன் பின்புறக் கதவால் வெளியே சென்றபோது விமலனது பயம் இன்னும் அதிகரித்தது. அவன் அந்தப் பெண்ணை நிமிர்ந்து பார்க்காமலே நின்று கொண்டிந்தான்.

பேய் வாசஞ் செய்யும் அறை என்று தெரிந்து கொண்டும் துணிந்து ஒரு அசட்டுத் தைரியத்தில் உள்ளே சென்றதும் அந்தப் பேயே வெளிப்பட்டால் ஒருவன் எந்த நிலையில் இருப்பானோ அந்த நிலையிற் தான் இருந்தான் விமலன். அவன் அணிந்திருந்த சட்டை முழுவதும் வியர்வையில் தெப்பமாக நனைந்திருந்தது. திரும்பி ஓடிவிடலாம் என்று கூட நினைத்தான். அப்போது 'ஏன் நிற்கிறீர்கள். இப்படி நாற்காலியில் அமர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் வாங்கிக் கொடுத்த துப்பாக்கி பாலனுக்குரொம்பப் பிடிச்சிருக்கு.' என்ற குரல் கேட்டு அவன் திடுக்கிட்டு நிமிர்ந்த போதுதான் அந்தப் பெண்ணை அவனுக்கு முதன் முதல் நேரிற் சந்திக்கும் சந்தர்ப்பங் கிடைத்தது.

சில நிமிட நேரம் அந்தப்பெண்ணை அவன் இமைக்காமல் பார்த்துக் கொண்டேயிருந்தான். அவள்கூட அவனைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் அவளுடைய பார்வையில் ஒருவதமான ஆச்சரியமுந் தெரியவில்லை. விமலன் தன் வாயடைத்துக் கனவுக்கும் நினைவுக்கும் இடைப்பட்ட நிலையில் இருந்தபோது

''என்னை நீங்கள் இன்னும் அடையாளங் கண்டு கொள்ளவில்லையென்று நினைக்கிறேன்''. நான் தான் தமயந்தி. நீங்கள் ஒரு காலத்தில் சுற்றி வட்டமிட்ட பெண். அந்த நேரத்தில் உங்கள் புனிதமான அன்பை உணராமல் போலி கௌரவத்துக்கும் உத்தியோகத்திற்கும் முதலிடங் கொடுத்து ஒரு டாக்டரை மணந்துகொண்டேன். ஈற்றில் எனக்குக் கிடைத்த பரிசு—இல்லை தண்டனை என்றுகூடக் கூறலாம்—அதுதான் நான் இப்போது அநுபவிக்கும் இந்த அவல வாழ்வு. அதில் ஒளிமயமாய் கலங்கரை விளக்கம் போன்றிருப்பவன் தான் என் மகன் பாலன். அவன் மட்டும் இல்லாமலிருந்திருந்தால் நான் எப்போதோ இறந்ருப்பேன். பணத்திற்கும் பதவிக்கும் ஆசைப்பட்டு நான் கைப்பிடித்த என் கணவர் கடைசியில் நான் கற்பனை செய்ததில் ஒரு துளி மகிழ்ச்சியைக்கூட எனக்களிக்கவில்லை. அவர் மலருக்கு மலர்தாவும் வண்டைப்போல பெண்களைச் சுற்றியலைந்தார். அப்படியான வாழ்க்கையில் நிறைவு கண்டார். அவர் எடுத்த சம்பளப் பணம் முழுவதும் அதில் விரயமாகியது. தட்டிப்பசிய எனக்குக் கிடைத்தது அடியும் உதையுந்தான். என் கண்மணி பாலன் இரண்டு வயதாக இருக்கும் போது அவனை வளர்த்தெடுக்க நான் போட்டுக்கொண்ட வேடந்தான் இந்தப் பைத்தியம்.

'உங்களை நான் எப்போதோ கண்டேன். அடுத்த வீட்டுக்குப் புதிதாகக் குடியிருக்க வந்திருப்பவர்தான் நீங்கள் என அறிந்ததும் உங்கள் கண்ணில் தம்பித் தவறிக்கூடப் படாமல் வாழத் தலைப்பட்டேன். எனது அவல வாழ்க்கையை நீங்கள் காண நேர்ந்தால் கைகொட்டிச் சிரிப்பீர்கள் என்ற பயமெனக்கிருந்தது. ஆயினும் என் திட்டத்தை பாலன் தவிடுபொடியாக்கி விடுவான் என்ற பயம் அவன் உங்கள் வீட்டுக்கு அடிக்கடி வரத் தொடங்கியதும் என்னை வாட்டியது. ஆயினும் நான் அவனைத் தடுக்கவில்லை. உங்களுடைய கருணையுள்ளத்தை நான் உணர்ந்திருந்தேன். விமலன், எப்படியாவது எனக்கு வேண்டிய ஒருவரைத் தேடி அவரிடம் எனது உண்மையான நிலையை எடுத்துரைத்த பின்பு தான் எனக்கு மரணம் ஏற்பட வேண்டும் என்ற என் பிரார்த்தனை வீண்போகவில்லை.

நான் இறந்தால் பாலன் அநாதையாகி விடுவான் எனவொரு பயம் எனக்கு எப்போதுமே இருந்து வந்தது. அந்தப் பயமும் இன்று என்னை விட்டு நீங்கிவிட்டது.

'இனி எந்த நிமிடம் எனக்கு மரணம் வந்தாலும் அதை ஏற்றுக்கொள்ள நான் தயாராகி விட்டேன். நடைப்பிணமாக சோதனை நிரம்பிய ஒரு வாழ்வு வாழ்வதைவிட நான்சாவதையே விரும்புகிறேன் விமலன்.

'அன்றொருநாள் எனக்கு அன்போடு நீங்கள் வாங்கிக் கொடுத்த பட்டுச் சேலையைத் திருப்பி உங்கள் முகத்தில் நான் எறிந்தது உங்களுக்கு நினைவிருக்கலாம். அதற்கு ஏற்ற தண்டனையை நான்அநுபவித்துவிட்டேன். 'எப்படியாவது இந்தச் சேலையை ஒரு நாளாவது உன் உடலை அலங்கரிக்க நான் வைக்காவிட்டால் என் பெயர் விமலன் அல்ல, என்று நீங்கள் அன்று வஞ்சினங் கூறிச் சென்றது உங்களுக்கு மறந்துவிட்டிருக்கலாம். ஆனால் நான் அதை மறக்கவில்லை. நான் இறந்தால் அந்தச்சேலையே என்

# அவன் ஏன் அழுதான்

உடலை அலங்கரிக்கட்டும். நான் இறக்கு முன் உங்கள் ஆசைகளில் ஒன்றையாவது நிறைவேற்றிய நிம்மதி எனக்கிருக்கட்டும். உங்களையும் உங்கள் குடும்பத்தையும் இறைவன் ஆசீர்வதிக்கட்டும். இம்...இனி நீங்கள் போகலாம் விமலன்...தயவு செய்து போய்விடுங்கள்! இதற்கு மேல் நான் உங்களுடன் பேசவிரும்பவில்லை...''

இதுவரை சாந்தமாகப் பேசிவந்த தமயந்தி திடீர் என இப்படிக் கொடூரமாகச் சத்தமிட்டபோது விமலன் பயந்து போய்வெளியேறினான். ஏனைய விபரங்களை விடிந்ததும் பாலனிடமிருந்து அறிந்து கொள்ளலாம் என்றொரு நம்பிகையில் அவன் தன் வீட்டை நோக்கி நடந்தான். அன்று இரவு அவன் தூங்கவில்லை. அவனால் தூங்க முடியவில்லை. விழிப்புக்குந் தூக்கத்துக்கும் இடைப்பட்ட நிலையில் அவன் படுத்திருந்தபோது சிவகாமி வந்து அவனை எழுப்பினாள். அவன் திடுக்கிட்டுக் கண் விழித்தான். பாலனது அம்மா தூக்க மாத்திரை விழுங்கி இறந்து விட்டாளாம். வீட்டில் நிறையப்பேர் கூடிநிற்கிறார்கள்.' என்று அவள் கூறி முடிக்கவில்லை. விமலன் படுக்கையை விட்டு எழுந்து அடுத்த வீட்டுக்கு ஓடினான்.

அவனுக்கு உடல் பதறியது. இதயம் வேதனையால் சாம்பியது. மனங் கொள்ளாத துன்பத்துடன் அவன் அடுத்த வீட்டில் காலடி எடுத்து வைத்ததும் 'மாமா என்னை விட்டுப்போட்டு அம்மா போயிட்டுது, மாமா' என்று கதறிக் கொண்டே அவனை வந்து கட்டிப் பிடித்துக்கொண்டான் பாலன். அந்தப் பிஞ்சு உள்ளத்தின் குமுறல் அவன் நெஞ்சைத் தொட்டபோது அவன் கண்களில் இருந்து கண்ணீர் 'குபு குபு' என்று ஊற்றெடுத்துச் சொரிந்தது. பாலனை அன்புடன் அணைத்துத் தேற்றியபடியே அவன் உள்ளே சென்றான். அழகாகத் தலைவாரப்பட்டுப் பூச்சூடி மஞ்சள் குங்குமத்துடன் பட்டுச் சேலையில் காணப்பட்ட தமயந்தியின் உடல் அவனைக் கலக்கியது.

பாவம் இந்தப்பெண்ணுக்கு உண்மையான பைத்தியமோ என்னவோ தெரியாது தம்பி. பைத்தியமாக இருந்திருந்தால் இப்படியாக எல்லாம் ஒழுங்கு செய்துவிட்டுச் செத்திருக்க முடியாது. பார் தன்னை எவ்வளவு அழகாக அலங்கரித்துக்கொண்டு...அதோடு தான் தற்கொலை செய்வதற்கு யாரும் காரணம் இல்லையென்றும் பிரேத அடக்கத்திற்குயாராவது புண்ணியத்தில் ஒரு நல்ல சேலை வாங்கிக் கொடுத்தால் கட்டிவிடும்படியும் எழுதியிருக்குமா...? என்று அடுத்த வீட்டுப் பெரியவர் அவனிடங் கூறியபோது அவன் அதை அநுமதிப்பது போல் தலையை மட்டும் அசைத்துக் கொண்டு வேட்டித் தலைப்பால் கண்ணை ஒற்றிக் கொண்டான். சிறிது நேரம் நின்று தமயந்தியின் வெற்றுடலைக் கூர்ந்து நோக்கிவிட்டு பாலனையும் அழைத்துக் கொண்டு வெளியே ஒரு ஒதுக்குப்புறமான இடத்திற் சென்றமர்ந்தான் அவன் மடியில் பாலன் அமர்ந்து கொண்டான்,

சிறிது நேரம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த பாலன் ''மாமா உங்களிடம் ஒரு ரகசியம் சொல்வன். நீங்கள் அதை யாரிட்டயும் சொல்லக்கூடாது. நேற்று இரவு அம்மா படுக்கப்போக முந்தி என்னை அழைத்துக் கொஞ்சிப் போட்டு பாலா அடுத்த வீட்டு மாமா எங்க வீட்டுக்கு வந்ததை நீ யாரிட்டயும் சொல்லக்கூடாது என்று கூறிவிட்டு உங்களிடம் கொடுக்கும்படி ஒரு கடிதமும் தந்திச்சு.'' என்று சொல்லி ஒரு கடிதத்தை எடுத்து விமலனிடம் நீட்டினான் பாலன்.

பரபரப்படன் விமலன் அதைப் பிரித்துப் படித்தான்.

**அன்புள்ள அண்ணா,**

இதைவிடப் புனிதமாக என்னால் உங்களை அழைக்க முடியவில்லை. என் உண்மையான வாழ்க்கையை நீங்கள் அறிந்துவிட்டீர்கள். இந்த உலகத்தில் ஒருவருக்காவது எனக்குப் பைத்தியமில்லை என்பது தெரியவேண்டும் என்று வெகு நாட்களாக ஆசைப்பட்டேன். என் ஆசை நிறைவேறிவிட்டது. என் ஆசை நிறைவேறிவிட்டது. ஆயினும் உலகம் இனிமேலும் என்னைப் பைத்தியமென்றே நினைத்துக்கொண்டிருக்கட்டும். அதுதான் என் ஆசையுங்கூட. பாலன் இனி உங்கள் பொறுப்பு. என் கடைசி யாத்திரைக்குச் சேலை கொடுக்கும் புண்ணியவான் நீங்களாகவே இருக்கட்டும். உங்களையும் உங்கள் குடும்பத்தையும் இறைவன் ஆசீர்வதிக்கட்டும். இந்தக் கோழைத்தனமான மரணத்தை வலிந்து ஏற்றுக் கொள்வதற்காக என்னை மன்னித்து விடுங்கள் விமலன்.

அன்புத் தங்கை,
**தமயந்தி.**

விமலன் கடிதத்தைப் படித்து முடித்துவிட்டுத் தன் சட்டைப் பைக்குட் சொருகிக் கொள்கிறான். மக்கள் கூட்டம் சிறுகச் சிறுக அங்கும் வந்து கூடிவிடுகின்றது. வைத்தியப் பரிசோதனைகள் முடிவடைகின்றன. உயிரற்ற சடலத்தின் கடைசி யாத்திரைக்காக ஒரு சேலை தேவைப்படும்போது சிவகாமி ஒரு நல்ல பட்டுச் சேலையை நீட்டுகிறாள். பக்கத்தில் நின்றவர்கள் ''பாவம்! பைத்தியத்தில் இப்படிச் செய்துவிட்டாள் என்கிறார்கள். இன்னும் சிலர் பைத்தியமாவது எல்லாம் வேண்டுமென்றுதான் செய்திருக்கவேண்டுமென்கின்றனர். விமலன் இருவர் கூற்றையும் கேட்டுக்கொண்டுமௌனமாக நிற்கிறான். அவன் கண்களிலே சோகந் ததும்புகிறது.

பிரேத ஊர்வலம் தொடங்குகிறது. அவள் இப்படியிருந்து சீரழிவதைவிட இறந்தது நலம் எனப் பலர் அபிப்பிராயப் படுகின்றனர். பாலனும் அதை ஏற்றுக் கொள்கிறான். மயான அமைதியில் செல்லும் ஊர்வலத்தினிடையே பலமாகக் கேட்கிறது ஒரு விசும்பல். எல்லோர் கண்களும் அந்தப் பக்கம் நோக்கும்போது விமலன் மேற்துண்டையெடுத்து அழுகையை அதற்குள் அடக்க முயற்சிக்கிறான். இப்போது பாலனும் அவனுடன் சேர்ந்து கொள்கிறான். பாலன் அழுவதற்கு நியாயம் உண்டு என நினைக்கும் மக்கள் விமலன் ஏன் அழுதான் என்ற காரணம் புரியாமல் விழிக்கின்றனர்.

(யாவும் கற்பனை)

சுவாமி விவேகானந்தருக்கும்
மகாத்மா காந்திக்கும்
இருந்த தெய்வீகத்
தொடர்பென்ன?

மகாத்மாவுக்கு முன்பே இந்திய சுதந்திரத்தை
நேசிக்கத் தொடங்கிய துறவி யார்?


மகாத்மாவின் இலட்சியம்
நிறைவேற அவர் எப்படி
உதவினர்?

**சுதந்திரனில்**

**விரைவில் எதிர்பாருங்கள்!**

இதுவரை நீங்கள் தெரிந்திருகாத புத்தம் புதிய கருத்துக்கள் செறிந்த கட்டுரை வெளிவருகிறது!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



3வது வாரமாக காட்சியளிக்கிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) மைலன் (கொழும்பு) வெலிங்டன் (யாழ்நகர்) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)

விஜயா (மட்டுநகர்) மொடேன் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி)

சிவாஜிகணேசன், தேவிகா, ராஜஸ்ரீ, சகஸ்ரநாமம், வி. கே. ராமசாமி நாகேஷ்

—நடிக்கும்—

# நீல வானம்

இப்பொழுது காட்சி தருகிறது கெப்பிட்டல் (கொழும்பு)

## அலிபாபாவும் 40 திருடர்களும்

இப்பொழுது அமோக வெற்றியுடன் காட்சியளிக்கின்றது!!



கருத்துமிக்க வசனங்கள்! காதுக்கினிய இன்னிசை! மனதை யள்ளும் காதற் கட்டங்கள்! அழகிய வெளிப்புறக்காட்சிகள்! மயிர்க் கூச்செறியும் வாழ்ச் சண்டைகள்! எல்லாம் நிறைந்த உயர்ந்த படைப்பு!!

சென்ரல் (மருதானை) நவா (கொம்பனிவீதி) ராணி (யாழ்நகர்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு)

ஜோதி (திருமலை) லிபர்ட்டி (ஹட்டன்) ரெக்ஸ் (பதுளை) ஆனந்தா (கம்பளை)

'நடிகர் திலகம்'

* சிவாஜிகணேஷன் * சரோஜாதேவி


★ நாகேஷ் ★ பாலாஜி ★ சுந்தரராஜன் ★ வி. கே. ராமசாமி ★ சுந்தரிபாய் ★ ராஜசுலோசனு —மற்றும் பலர் நடித்த

சுஜாதாவின்

# என் தம்பி

டைரக்ஷன்: ஏ. சி. திரிலோகச்சந்தர் M.A. இசை: எம். எஸ். விஸ்வநாதன் (பாஸ்கள் ரத்து)

## 2-வது ஜனத்திரள் வாரம்!



செல்லமகால் (கொழும்பு) இம்பீரியல் (மட்டுநகர்) நெல்சன் (திருமலை)

ஈரொஸ் (பாமன்கடை) அசோகா (புத்தளம்)

புரட்சி நடிகர் * எம். ஜி. ஆர். கவர்ச்சி நடிகை * ஜெயலலிதா

* நம்பியார் * அசோகன் * நாகேஷ்

மற்றும் பலர் நடித்த

# ரகசியப் பொலிஸ் 115

(ஈஸ்மன் கலர்)


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர் லிமிட்டெட் [illegible] கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஆம் இலக்கத்தில் 1968-ம் வருடம் டிசம்பர் மாதம் 26-ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது. தொலைபேசி: 23411

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org